விலை: 30.00.
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 05 செவ்வாய்க்கிழமை (19.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## டிப்பர் – வான் கோர விபத்து
## 5 மாத கர்ப்பிணி உட்பட நால்வர் உயிரிழப்பு!



23

## கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால்
## வடக்கில் வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடி ஏற்றி ஆதரவு
### பஸ் சேவைகள், பாடசாலைகள் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

ஐ.நாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதனை வலியுறுத்தியும் சர்வதேச விசாரணையை கோரியும் இன்று கிழக்கு மாகாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதோடு மக்கள் எழுச்சி போராட்டமும் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படும் எனவும், கறுப்புகொடி ஏற்றி ஆதரவு 23

## விருப்பத்திற்கு மாறாக
# தமிழ் மக்கள்
# ஆளப்படுகின்றனர்
### ஐ.நாவின் முன்னாள் செயலரிடம் இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு



(கொழும்பு) விருப்பத்திற்கு மாறாக தமிழ் மக்கள் ஆளப்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அத்தோடு இலங்கை தொடர்பான பிரச்சினையை தொடர்ந்தும் சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல வேண்டும் என ஐ.நாவுக்கான முன்னாள் அரசியல் பிரிவின் செயலாளர் நாயகத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(23-ம் பக்.)

## ஜெனிவாவில் கருத்துமோதல் சரத் குழுவினர் வெளிநடப்பு

(ஜெனிவா)

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் வளாகத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை குறித்த விசேட உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்ற சரத் வீரசேகர தலைமையிலான இராணுவத்தை பாதுகாக்கும் அமைப்பினருக்கும் புலம்பெயர் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் சரத் வீரசேகர தலைமை 23

## இலங்கை தொடர்பில் நாளை ஜெனிவாவில் விவாதம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் சமர்ப்பித்துள்ள இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதம் நாளை புதன்கிழமை ஜெனிவாவில் நடைபெறவுள்ள நிலையில் இதில் உரையாற்றவுள்ள சர்வதேச நாடுகள், மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் சர்வதேச நீதிபதிகளின் அவசியம் தொடர்பில் வலியுறுத்தவுள்ளனர். 23

## மக்களின் இழப்புகளின்றி போர் மிகவும் கடினமானது
### இராணுவத் தளபதி மஹேஸ் சேனநாயக்க

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டு தொடர்பான எந்த விசாரணைகளுக்கும் இலங்கை தயாராக உள்ளது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் 23

## ஜெனிவா பிரேரணையில் உள்ளடக்கங்கள் மேலும் சில தேவை

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகளினால் ஜெனிவா மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் மேலும் சில உள்ளடக்கங்களை முன்வைக்க வேண்டுமென இலங்கை தரப்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக ஜெனிவா தகவல்கள் தெரி23

## கால அவகாசம் வழங்கப்படவில்லை சர்வதேச மேற்பார்வையே நீடிப்பு
### தவறான கருத்துக்களை பரப்பக்கூடாது
### ஜெனிவாவில் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மீதான இரண்டு வருட கால சர்வதேச மேற்பார்வைக் காலமே நீடிக்கப்பட்டுள்ளது. இதுவே ஜெனிவா பிரேரணை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாறாக கால அவகாசம் வழங்கப்பட்டமை என்பது தவறான விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளருமான எம்.ஏ.சுமந்தின் ஜெனிவாவில் தெரவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 40 ஆவது 24

## சர்வதேச நீதியை நிலைநாட்டுவதற்கு அரசு ஒப்பந்தம்!
### வடக்கு ஆளுநர் ராகவன்

(கொழும்பு)

இலங்கை, சர்வதேச நீதியை நிலைநாட்டுவதற்கு ஒப்பந்தப்பட்டுள்ளதாக, வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். அதில் ஒன்றே மனித உரிமையை காப்பாற்றுவது என அவர் வழங்கிய பிரத்தியேக 23

## வடக்குப் பிரச்சினைக்கு தீர்வு கண்டால்
## சர்வதேசத்திடம் பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் இருக்காது
### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டால் சர்வதேசத்திடம் நாம் பொறுப்புக்கூற வேண்டிய அவசியல் இருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்த நாட்டின் உத்பத்தியில் ஏற்பட்டுள்ள தடைகளே காரணம் எனவும் வடக்கு மக்களின் காணி விடுவிப்பு குறித்து தொடர்ச்சியாக அம்மக்களின் பிரச்சினைகளை அம் 24

## வடக்கு காணிப் பிரச்சினையை ஆராய பாராளுமன்றில் கலந்துரையாடல்

(கொழும்பு)

வடமாகாண காணிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு விரைவாக பாராளுமன்றத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவிருப்பதாக, காணி விவகார அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் 23

## தமிழர்களுக்கு நீதி கிடைக்க தொடர்ந்து ஒத்துழைப்பு
### பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அறிவிப்பு

(லண்டன்)

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதிகிடைப்பதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அறிவித்துள்ளது.

பிரித்தானிய தமிழ் கன்சர்வேட்டிவ் கட்சியின் ஏற்பாட்டில், பிரித்தானிய பாராளுமன்றில் இடம்24

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

**வணிகத்தில் முதலாம் தேர்வு (வெளிவாரி) - 2016**
**வணிகத்தில் இரண்டாம் தேர்வு (வெளிவாரி)- 2016**
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் வைகாசி மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் **பரீட்சைக்கான விண்ணப்ப படிவத்தினை** எதிர்வரும் **21.03.2019** ம் திகதியிலிருந்து **31.03.2019**ம் திகதி வரை அலுவலக நேரத்தில் **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில்** அல்லது **www.codl.jfn.ac.lk** என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம், மேற்படி பரீட்சைக்கான நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**பதிவாளர்**
**18.03.2019**

(C-5813)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## 2019

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாறர்களிட மிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொது நிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபாரப் அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 19.03.2019 தொடக்கம் 01.04.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (**NBT,VAT** தவிர்ந்த) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 01.04.2019ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 25.03.2019 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | பூதவராயர் கோவில் வீதி, ஏழாலை | 3.06 | 3 மாதம் | C8 | 31,000.00 |
| 2 | புகையிரத நிலைய கிழக்கு வீதி, சுன்னாகம் | 6.80 | 3 மாதம் | C7 | 68,000.00 |
| 3 | பாப்பாத்தோட்ட வீதி, இணுவில் | 1.54 | 2 மாதம் | C9 | 16,000.00 |
| 4 | துல்மினியதோட்ட 1ம் ஒழுங்கை, சங்குவேலி | 1.41 | 2 மாதம் | C9 | 15,000.00 |
| 5 | சுற்றுமதில் அமைத்தல், மயிலங்காடு சந்தை | 1.59 | 2 மாதம் | C9 | 16,000.00 |
| 6 | ஈவினை இந்து மயான சுற்றுமதில் அமைத்தல் | 0.86 | 2 மாதம் | C9 | 9000.00 |
| 7 | வீதி விளக்கு வழங்குதல்-50W LED -213 Nos 100W LED -18 Nos, 36W CFL - 367 Nos | 3.63 | 2 கிழமை | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 37,000.00 |
| 8 | நிழற்பட பிரதி இயந்திரம் வழங்குதல் | 0.30 | 2 கிழமை | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 3000.00 |

**க.தர்ஷன் - தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக் குழு**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்.**

(C-5814)

வேட்பாளர்கள் தொடர்பில்

# மைத்திரி - மகிந்த கட்சிக்குள் முரண்பாடு

(கொழும்பு)

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் யார் என்ற விவகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நிறுத்துவதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம்பெறுவதாக செய்திகள் வெளியாகின.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே எனக் கூறியிருந்தார். அத்தோடு இதுவே தமது நிலைப்பாடு என்றும் கூறியிருந்தார்.

தற்போது பேசப்படும் அரசியல் கூட்டணி, மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக ஆக்குவதற்கானதல்லவென, மற்றுமொரு நிகழ்வில் கருத்து தெரிவித்த கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தார்.

இந்நிலையில் மைத்திரி தரப்புக்கும் மகிந்த தரப்புக்கும் இடையிலான உறவில் நெருடல் ஏற்பட ஆரம்பித்துள்ளது. அதனடிப்படையில் இருதரப்பிற்குமிடையே கூட்டணி அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளில் தோல்வி ஏற்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் ஏற்கெனவே பொதுஜன பெரமுன கட்சிக்குள் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# நாட்டின் பல பகுதிகள் நேற்று இருளில் மூழ்கின

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் நேற்று மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதாக மின்வலு எரிசக்திவலு மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் 2 ஆவது ஜெனரேட்டர் செயலிழந்துள்ளதன் காரணமாகவே இவ்வாறு மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நாட்டின் பெரும்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சு, விரைவில் மின்சாரத்தை வழமைக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. (ம-3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்.

பிறப்பு 07 . 08 . 1947



இறப்பு 18 . 02 . 2019

அமரர் திருமதி
## சிதம்பரப்பிள்ளை சோதி

கடந்த 18.02.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி சிதம்பரப்பிள்ளை சோதி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு 19.03.2019 செவ்வாய்க்கிழமை (இன்று) பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அமரரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும், தொலைபேசி, முகநூல், வைபர் ஊடாக அனுதாபங்கள், ஆறுதல்கள் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சங்கோலை, மாவிட்டபுரம். (8018) - குடும்பத்தினர்

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி

# தென் தமிழ்த்தேச மக்களின் தாயகம் தழுவிய போராட்டத்திற்கு த.தே.ம.முன்னணி பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தென்தமிழ் தேசத்திலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆயுதப் படைகளால் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும், யுத்த முடிவில் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களதும் நிலை என்ன என்பதனை அறிந்து கொள்வதற்காக அவர்களது உறவினர்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் குரல் எழுப்பி வருகின்றனர்.

அதேபோன்று கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்ட எமது மக்களின் படுகொலைக்கு நீதி கோரி தாயகம், தமிழகம், புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும், குரல் கொடுத்து வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், படுகொலைக்கான நீதி ஆகிய விடயங்களை கையாள்வதற்காகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் இயற்றப்பட்டது. குறிப்பாக சாதாரண நடைமுறைகளுக்கு மாறாக ஒரு நாட்டின் பெயர் குறித்து தீர்மானம் ஒன்றினை இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முன்வந்தபோது இலங்கைக்கு ஆதரவான வல்லரசு நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. அச்சந்தர்ப்பத்தில் இலங்கையில் மிகப் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களும், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களும் இடம்பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டிய அமெரிக்கா அக்குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசேடமாக இலங்கையின் பெயர் குறித்த தீர்மானம் அவசியமானது என நியாயப்படுத்தியிருந்தது. ஆனாலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அத்தீர்



மானத்தை நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட பிரதான நோக்கம் மறக்கப்பட்டுள்ளது. கடந்த 2015 செப்டெம்பரில் நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்க தீர்மானமானது குற்றங்களைப் புரிந்த இலங்கை அரசாங்கமே தான் செய்த குற்றங்களை விசாரிக்கும் நீதிபதியாக அமர்வதற்கு வாய்ப்பளித்துள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு பாரிய நெருக்கடியாக அமைந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலோ அன்றி இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விசாரணைகளிலோ எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் பூகோள ஆதிக்க நலன்களுக்காக அவர்களின் கைப்பாவைகளான தமிழ்த் தலைமைகளின் ஆதரவுடன் இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்குவதற்கு மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது இறுதி முடிவு எடுக்க முன்னதாக தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் பல்லாயிரமாகத் திரண்டு எமது எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தல்காலத்தின் கட்டாயமாகும்.

அந்தவகையில் இலங்கை அரசின் உள்ளக விசாரணை மீது நம்பிக்கையில்லை.

இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் விவகாரத்தில் மேலும் இரண்டுவருட காலநீடிப்பை வழங்குவதுதான் இலங்கை அரசு பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துக் கொள்ளவே வழி வகுக்கும் என்பதுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், போரில் பாதிக்கப்பட்ட ஏனையவர்களுக்கும் நீதி கிடைக்கவிடாது தடுப்பதாகவுமே அமையும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தவும் இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைகளை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படல் வேண்டுமென வலியுறுத்தி முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு எமது அரசியல் இயக்கம் பூரண ஆதரவு தெரிவித்துக் கொள்வதுடன் மேற்படி போராட்டத்திற்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இஸ்லாமிய சகோதரர்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம் என அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# வடமாகாணத்தின் 14 பாடசாலைகளை விரைவில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த நடவடிக்கை

## ஆளுநர் கலாநிதி ராகவன் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின்14 மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கான கோரிக்கையை மத்திய கல்வி அமைச்சிற்கு வழங்குவதற்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தீர்மானித்துள்ளார்.



வடமாகாணத்தின் பல பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தமது பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அண்மைக்காலமாக ஆளுநரிடம் முன்வைத்து வருகின்ற நிலையிலேயே ஆளுநர் மேற்குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஏனைய எட்டு மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணத்தின் தேசிய பாடசாலைகள் 2 சதவீதமாக காணப்படும் அதேவேளை ஏனைய மாகாணங்களின் தேசிய பாடசாலைகள் 3.5 சதவீதமாக காணப்படுவதால், வடமாகாணத்தின் தேசிய பாடசாலைகளையும் சராசரியாக 3.5 சதவீதமாக கொண்டுவரும் நோக்கில் 14 பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கு ஆளுநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் குறித்த 14 பாடசாலைகளும் மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் கட்டாயம் பிரதிநிதித்துவம் செய்யவேண்டுமென்றும் அவற்றை தெரிவு செய்து அனுப்பும் பொறுப்பு அந்தந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கே உள்ளதெனவும், அவர்கள் கூடியவிரைவில் பாடசாலைகளை தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## சர்வதேச விசாரணை வேண்டும்

# நீதிக்கான பேரெழுச்சிக்கு அழைப்பு விடுத்து சுவரொட்டி




(ஏறாவூர்)

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி கதவடைப்பு போராட்டத்துக்கும் நீதிக்கான மாபெரும் மக்கள் பேரெழுச்சிக்கும் வருமாறு அழைப்பு விடுத்து மட்டக்களப்பு மாவட்டமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து பேரெழுச்சி ஆரம்பமாகும் என்றும் குறித்த சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகரங்களிலும் கிராமங்களிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கால அவகாசம் வேண்டாம், சர்வதேச விசாரணை வேண்டும், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்குப் பாரப்படுத்த வேண்டும், காணாமல் போனோருக்கான அலுவலகம் வேண்டாம் ஆகிய கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இப்போராட்டம் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் அமைப்பு என்றும் இந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# முப்பது மில்லியன் ரூபாய் பெறுமதியான நாற்பது தங்க பிஸ்கட்டுக்கள் பறிமுதல்

## கட்டுநாயக்கவில் ஒருவர் கைது



(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுக்களை எடுத்துவர முற்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, புதுக்கடைப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் சென்னையிலிருந்து வருகை தந்த ஸ்பைஸ் ஜெட் விமான சேவைக்குச் சொந்தமான SG 001 என்ற விமானத்தின் மூலம் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான 4 கிலோ கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்டுக்கள் 40 கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 'வானுக்கும் எல்லையுண்டு நட்புக்கில்லையே...'

## ஐ.பி.எல்., உற்சாகத்தில் ஹர்பஜன் சிங்

ஐ.பி.எல்., தொடர் ஆரம்பமாக இன்னும் சில நாட்கள் மட்டும் உள்ள நிலையில் சென்னை அணியினர் பயிற்சி, பயிற்சி போட்டி, படப்பிடிப்பு, கொண்டாட்டம் என 'பிசி'யாக உள்ளனர்.

ஐ.பி.எல்., தொடரின் 12ஆவது சீசன் தொடர் வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் 'நடப்பு சம்பியன்' தோனியின் சென்னை அணி, ஹோலி தலைவராக உள்ள பெங்களூருவை சந்திக்கிறது.

இதற்காக சென்னை அணி வீரர்கள் அனைவரும் சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த சில நாட்களாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். முதல் நாள் நடந்த பயிற்சி போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்கள் என இரு அணியாக பிரிந்து விளையாடினர்.

துடுப்பாட்டத்தில் மூன்றாவது வீரராக களமிறங்கிய ரெய்னா 29 பந்துகளில் 56, துருவ் ஷோரே 26 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுக்க, முரளி விஜய் 32, அம்பதி ராயுடு 40 ஓட்டங்களை விளாசினர். பந்து வீச்சில் ஷர்துல் தாகூர் 2, தீபக் சகார் 1, ஹர்பஜன் சிங் 1, கரண் சர்மா 1 விக்கெட் வீழ்த்தினர். இதைக் காண மைதானத்தில் சுமார் 12,000 ரசிகர்கள் திரண்டனர்.

நேற்று மீண்டும் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு டி.என்.பி.எல்., தொடரில் சேப்பாக்கம் அணிக்காக விளையாடிய சாய் கிஷோர் உள்ளிட்ட பலர் பந்துவீசினர். அப்போது சென்னை அணித் தலைவர் தோனி, சக பணியாளர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். வீரர் ஒருவர் அடித்த பந்து பணியாளர் மீது வந்து விழுந்தது. பிறகு தோனியும் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டார். இவருக்கு கரண் சர்மா, சாய் கிஷோர் பந்து வீசினர்.

### 'டுவிட்டர்' கொண்டாட்டம்

மற்றொரு பக்கம் சென்னை அணியில் இடம்பெற்றுள்ள சுழற் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், கடந்த ஆண்டு போல 'டுவிட்டரில்' தமிழில் செய்தி வெளியிட்டு அசத்தி வருகிறார். இதில்,' வந்து பெட்டி படுக்கையை கூட இறக்கி வைக்கல, அதுக்குள்ள ஷூட்டிங்கா? 'தல' தோனி பாட்டு போட, நான், முரளி விஜய், கேதர் ஜாதவ் 'டான்ஸ்' ஆட, ஒரே தமாசு தான் போங்க,' என தெரிவித்துள்ளார்.

மற்றொரு 'டுவிட்டர்' செய்தியில் ரெய்னா, தோனி குறித்து ஹர்பஜன் கூறுகையில்,'

வானுக்கும் எல்லை உண்டு. நட்புக்கில்லையே. நட்புக்கு இல்லை முற்றுப் புள்ளியே,' என தெரிவித்துள்ளார்.

### ஓடிப்பிடிச்சு...

சமீபத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான நாக்பூர் ஒரு நாள் போட்டியில் மைதானத்துக்குள் புகுந்த ரசிகர் ஒருவர் தோனியை நோக்கி ஓடி வர, தோனி அவரிடம் இருந்து தப்பிக்க அங்கும் இங்கும் ஓடினார்.

இதுபோல சென்னையிலும் நடந்தது. பயிற்சியில் இருந்த தோனியை பார்க்க ரசிகர் ஒருவர் உள்ளே புகுந்தார். தோனி மீண்டும் ஓட, அவரும் துரத்த, பிறகு கைகொடுத்துவிட்டு திரும்பினார்.



பயிற்சியின்போது இரசிகர்களை நோக்கி கை அசைக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் ஹர்பஜன் சிங்




ஐ.எஸ்.எல் கால்பந்து தொடரின் வெற்றிக் கிண்ணத்துடன் பெங்களூரு அணியினர்

## ஆப்கானுக்கு முதல் வெற்றி: டெஸ்ட் அரங்கில் வரலாறு



வெற்றிக் கிண்ணத்துடன் ஆப்கானிஸ்தான் வீரர்கள்

அயர்லாந்துக்கு எதிரான டெஸ்டில் அசத்திய ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து அணிகள் மோதிய ஒரே ஒரு டெஸ்ட் போட்டி டேராடூனில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து முதல் இன்னிங்சில் 172 ஓட்டங்களை எடுத்ததுடன், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 314 ஓட்டங்களை எடுத்தது.

இரண்டாவது இன்னிங்சில் அயர்லாந்து அணி 288 ஓட்டங்களை எடுத்தது. பின், 147 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் அணி, நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 29 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த ஆப்கானிஸ்தான் அணிக்கு இசானுல்லா, ரஹ்மத் ஷா அரைச்சதம் கடந்து கைகொடுத்தனர். இரண்டாவது விக்கெட்டுக்காக 139 ஓட்டங்களைச் சேர்த்தபோது ரஹ்மத் ஷா (76) ஆட்டமிழந்தார். மொஹமட் நபி (1) 'ரன்-அவுட்' ஆனார். கேமிரான்-டோவ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஹஷ்மதுல்லா ஷஹிதி வெற்றியை உறுதி செய்தார்.

இரண்டாவது இன்னிங்சில் ஆப்கானிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இசானுல்லா (65), ஹஷ்மதுல்லா (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### 277 நாட்கள்

ஆப்கானிஸ்தான் அணி டெஸ்ட் அரங்கில் அறிமுகமாகி 277 நாட்களே ஆன நிலையில் தனது முதல் வெற்றியை பதிவு செய்து சாதனை படைத்தது. இதுவரை விளையாடிய 2 டெஸ்டில், ஒரு வெற்றி, ஒரு தோல்வியை பெற்றது. கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான பெங்களூரு டெஸ்டில் அறிமுகமான ஆப்கானிஸ்தான் அணி தோல்வியடைந்தது.

### இரண்டாவது டெஸ்ட்... முதல் வெற்றி

அயர்லாந்தை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணி, இதுவரை விளையாடிய 2 டெஸ்டில், ஒரு வெற்றி, ஒரு தோல்வியை பெற்றது. இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில் குறைந்த போட்டியில் முதல் வெற்றியை ருசித்த அணிகளுக்கான பட்டியலில் 2வது இடத்தை இங்கிலாந்து (எதிர்: அவுஸ்திரேலியா, 1877), பாகிஸ்தான் (எதிர்: இந்தியா, 1952) அணிகளுடன் பகிர்ந்து கொண்டது. இம்மூன்று அணிகளும் தங்களது 2வது டெஸ்டில் முதல் வெற்றியை பெற்றன.

- முதலிடத்தில் அவுஸ்திரேலியா உள்ளது. கடந்த 1877ல் இங்கிலாந்துக்கு எதிராக அறிமுகமான முதல் டெஸ்டிலேயே வெற்றி பெற்றது.
- கடந்த 1932ல் இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் அறிமுகமான இந்திய அணி, தனது முதல் வெற்றியை 20 ஆண்டுகளுக்கு பின் (1952, எதிர்: இங்கிலாந்து), 25வது டெஸ்டில் பெற்றது.
- கடந்த 1930ல் அறிமுகமான நியூசிலாந்து அணி, அதிகபட்சமாக 45 போட்டிகளுக்கு பின் (1956, எதிர்: மே.தீவுகள்) தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.


வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.02.2019 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

சின்னத்தம்பி அதிஸ்ட ஜெகநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது நாளை (20.03.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (C-5815)


56/18, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

“இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதால் நன்மை ஏற்படப்போவதில்லை”

# தமிழர்களின் பிரச்சினைகளை தூர்ந்து போகச்செய்ய முயற்சி

## நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(ஏறாவூர்)

**தமிழர்களின் பிரச்சினைகளை இழுத்தடிப்பு செய்து தூர்ந்துபோகச் செய்வதற்கான நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார்.**

அத்தோடு இலங்கைக்கு தொடர்ந்தும் கால அவகாசம் வழங் படுவதால் எந்தவித நன்மையும் தமிழ் மக்களுக்கு ஏற்படப் போவதில்லை என்றும் இதனால் மக்களின் பிரச்சினை தொடர்ச்சியாக இழுபறிக்கே செல்லும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயக மு மான சி.வி.விக்னேஸ்வ ரன் நேற்றுத் திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப்பை சந்தித்து கலந்துரை யாடினார்.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், “ஜெனிவா தீர் மானத்தை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் வழங்குவது என்பது நான்கு வருடத்தில் செய் யாததை இரண்டு வருடங்கள் மேலும் கொடுப்பதால் அது நடை முறைப்படுத்தப்படாது என்பது எமது கருத்து.

போர்வீரர்களுக்கு எதிராக எந்தவிதமான விசாரணைகளை யும் முன்னெடுக்க அனுமதிக் கமாட்டோம் என ஜனாதிபதியே கூறியிருக்கின்றார்.

இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படும்போது மேலும் மேலும் கால அவகாசம் வழங் கப்படுவதனால் எந்தவித நன் மையும் தமிழ் மக்களுக்கு ஏற்ப டப்போவதில்லை.


எமது பிரச்சினைகளை இழுத் தடிப்பு செய்து தூர்ந்துபோகச் செய்வதற்கான நடவடிக்கை களே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு அந்நிய நாடு களும் உதவும் வகை யில் செயற்படுவது டன் எமது கட்சிகளும் அவ் வாறு செய்வதால் தங்க ளுக்குரிய நன்மைக ளைப் பெற்றுக் கொள் ளலாம் என்று நினை த்து செயற்பட்டு வரு கின்றனர்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பாதுகாப்புசபை க்கு உண்மையை எடுத் துக் காட்டி இது தொடர் பாக நடவடிக்கை களை எடுப்பதாக இருந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இதனை அனுப்ப வேண்டும் என்பதே எமது கோரிக் கையாகவுள்ளது” என் றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர். மனுவேற்பிள்ளை சிறில் இராசநாயகம்



தாயின் மடியில் 23.05.1935 — ஆண்டவன் மடியில் 18.03.2019

நாரந்தனையை பிறப்பிடமாகவும் இல: 15, புனித யுவானியார் ஆலய விதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை சிறில் இராசநாயகம் அவர்கள் 18.03.2019 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை- அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருளப்பா- றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிலூட்ஸ் (றோஸ்) இராசநாயகம் அவர்களின் அன்புக்கணவரும் அமரர் சாளற், றஞ்சிதம், அமரர் மனோன், வயலற், சோதி, லூர்துமலர், விஜயா ஆகி யோரின் அன்புச் சகோதரரும், வோல்ரன் குயின்ரஸ் (விஜி-சுவிஸ்), டோல்ரன் ஜீன்ரஸ் (றெஜி- லண்டன்), நொய்லின் நிலானி (நிலா-பிரான்ஸ்), அருட்தந்தை ஜினோல்டன் விஜின்ரஸ் (இயக்குநர், இளவாலை புனித வளனார் விடுதி, ஆசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோய்ஸ் ஜெசிராணி, அனற் நிசாந்தினி, அழகக்கோன் ஆகியோரின் மாமனாரும், நிவோல்ரா, டிறோஜனா (சுவிஸ்), டொறின்சியன் , நிலக்சியன், கபிஸ்ரைன் (லண்டன்), பிறாயன், மரிஸ்ரன், மேரியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.03.2019 நாளை புதன்கிழமை மாலை 3.15 மணியளவில் புனித யுவானியார் ஆலயம் சுண்டுக்குளியில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக நாரந்தனை புனித பேதுரு பாவுலு ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8029)

466/4, யுவானியார் கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 021 222 8210, 076 484 1346 தகவல்: குடும்பத்தினர்.

**S.R.K. கோழி பாம்**

புறாயின் கோழிகள்/சுத்தம் செய்த இறை ச்சி கல்பேட் கோழிகள், ஊர் சேவல்கள், பாம்முட்டை, ஊர்முட்டைகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 745 7144

வழிபாதை 786 மூளாய், காளி கோவிலடி, மூளாய். (8018)

# கண்ணீர் அஞ்சலி

## திரு.கனகரத்தினம் தம்பாப்பிள்ளை



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.கணேசலட்சுமி உமாசுதன் ஆசிரியர் அவர் களின் பாசமிகு தந்தையார் கனகரத்தினம் தம்பாப் பிள்ளை அவர்களின் பிரிவால் துயருற்றுள்ள அன்னாரின் குடும்பத்தவர்களு க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடை யவும் இறைவனை பிரார்த்திக் கின்றோம். (8025)

பாடசாலை சமூகம் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

## இராசி பலன்

**மீனம்** – தேக நலனில் இருந்த பாதிப் புக்கள் அகலும் சுவாரஸ்ய மான சம்பவங்கள் இடம்பெ றலாம், செய்தொழிலில் சிறப் புக்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்** – சந்தித்தவர்களால் சந்தோ சம் கிடைக்கும் நாள், அடிப்படை வசதி வாய் ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** – தொலைபேசி வழியில் ஆச் சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரி யத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** – இழுபறியாக இருந்த காரி யங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு பவர்களை இனங்கண்டு கொள் வீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்** – மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனு பவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | செவ் | | ராகு |
| புத | இராசி பலன் | கிரகநிலை | |
| சுக் | சந்திராஷ்டமம் | திருவோணம்,அவிட்டம் | சந் |
| சனி, குரு, கேது | | | |

19.03.2019

பங்குனி 05, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 12.17 மணிக்கு

மகம் பிற்பகல் 5.25 மணிவரை

சுபநேரம் 10.48-12.18 மணிவரை

இராகுகாலம் 3.18-4.48 மணிவரை

வளவன்

**கடகம்** – குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிக ழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கை யுண்டு, கலகலப்பான தக வல்கள் வந்துசேரலாம்.

**மகரம்** – சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** – நண்பர்கள் ஒளிவுமறை வி ன்றி பழகுவார்கள், ஆரோ க்கியத்தில் கவனம் தேவை, குடும்பச்சுமை கூடும், திட் டமிட்ட காரியங்களில திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர வீர்கள், குடும்பத்தினரி டையே ஏற்பட்ட மனஸ்தா பங்கள் அகலும், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** – சேமிப்புக்கள் உயரும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்களும் நண் பர்களும் வலியவந்து உதவு வார்கள் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள்.

**துலாம்** – அதிகாரிகள் அனுகூலமான நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப்பாதையை நோக்கி நகரும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெற லாம், போசன சுகமுண்டு.

**கன்னி** – சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், மனதில் தேவையற்ற சஞ்சலங்க ளைத் தவிர்ப்பது நல்லது, சயனக்குறைவான நாள்.



தேசிய சுகாதாரநல கண்காட்சி கடந்த 15 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காஸிம், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் இலவசமாக வைத்திய முகாம் இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர்.

# 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் செம்மணியில் மூன்று பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி பகுதியில் 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இம்மூவரும் 10 கிலோ கேரளக் கஞ்சாவை கைமாற்றுவதற்கு வருகை தந்திருந்த போதே யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரிடமும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதுடன், மூவரையும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையும் முன்னெடுத்து வருகின்றதாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-101)

# திருநெல்வேலி சந்தைக்கு வழங்கும் நீரின் அளவை அதிகரிக்கக் கோரிக்கை

நல்லூர் பிரதேச சபையினால் திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு வழங்கும் குடிநீர் தாங்கியின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இதுவரை செயற்படுத்தப்படவில்லையெனப் பொதுமக்களும் வியாபாரிகளும் குற்றம் சாட்டுகின்றனர்.

தினம் பல்லாயிரக்கணக்கான பொதும்க்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் தமக்குத்தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் வந்து செல்லும் நிலையில் ஒரு நீர்த்தாங்கியில் மட்டும் குடிநீர் வழங்கப்படுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது அதிக வெப்பத்துடனான கால நிலை நிலவும் வேளையில் வழங்கப்படும் குடிநீரின் அளவு போதாது எனத் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச சபைக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் இப் பொதுச் சந்தை குடிநீர் தொடர்பில் கடந்த மாதம் 11 ஆம் திகதி உறுப்பினர் ஒருவரால் குறித்த சந்தைக்கு குடி தண்ணீர் தாங்கிகளை அதிகரிக்குமாறு கோரிய பிரேரணை நிறைவேற்றப்பட்டும் நடைமுறைப்படுத்தவில்லை. எனவே மக்களுக்கு சேவையாற்றுவோம் எனக் கூறி வாக்குகளைப் பெற்றவர்கள் மக்கள் தேவையறிந்து குறைகளை நிவர்த்தி செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் நல்லூர் பிரதேசசபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்ட போது இவ்வாரம் மேலும் ஒரு குடிநீர்த் தாங்கியை வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (5-10)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் கடந்த 13 ஆம் திகதி புலம்பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் பற்பநாதன் என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்ட வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.




# கடையிற்சுவாமி ஆலயத்திற்கு ஹாவாய் சுவாமிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயத்திற்கு அமெரிக்க ஹாவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதி நாத வேலன் சுவாமிகள் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் வருகை தரவுள்ளார் அதேவேளை வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் ஆலயத்திற்கும் செல்லவுள்ளார். (5)

# லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரி விளையாட்டுப் போட்டி நாளை

மல்லாகம் லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டசூரி மைதானத்தில் கி.சதீஸ்கும்ார் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு விவாகப் பதிவாளர் இ.இராதாகிருஷ்ணா, இலங்கை வங்கி காங்கேசன்துறைக்கிளை முகாமையாளர் திருமதி. த.சங்கீதா, யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்களான கே.அருந்தவநேசன், திருமதி நா.சுகிர்தா, யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆசிரியர் ஜெ.கலிதா, மானிப்பாய் சர்வதேச பாடசாலை ஆசிரியர் திருமதி செ.ஜீவிதா ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசைப்போட்டி மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வருடாந்தம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான தமிழிசைப் போட்டியில் வட மாகாணத்திற்கான போட்டி எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிறு) காலை 7.30 மணி முதல் பிற்பகல் 6 மணிவரை நடைபெறும். 23 ஆம் திகதி (பிரிவு - 1 காலை 7.30 மணிக்கும், பிரிவு - 2 பிற்பகல் ஒரு மணிக்கும்), 24 ஆம் திகதி (பிரிவு - 3 காலை 7.30 மணிக்கும், பிரிவு - 4 பிற்பகல் ஒரு மணிக்கும்) நடைபெறும். போட்டியில் பங்கெடுக்கும் மாணவர்கள் கலாசார உடையுடன் சமுகம் தரவும். உங்கள் பாடசாலையை வெளிக்காட்டும் அடையாளங்களை (Padges) தவிர்க்கவும்.

விண்ணப்பதாரிகள் தம்மை அடையாளப்படுத்துவதற்காக பின்வருவனவற்றுள் ஏதாவதொன்றைக் கொண்டு வருதல் வேண்டும். அவையாவன,

1.தேசிய அடையாள அட்டை

2.கடவுச்சீட்டு

3.அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் புகைப்படம்

4.அஞ்சல் அடையாள அட்டை

மேலதிக தகவல்களுக்கு, கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 011 236 3759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் க.க.உதயகுமார் அறிவித்துள்ளார். (5-7)

# ஆலயங்களில் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இரா ஜராஜேஸ்வரி அம்பாள் தேவ ஸ்தான அலங்கார உற்சவ இறுதி நாளான நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அஷ்டோத்திர சது (108) சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் இடம்பெறும். பிற்பகல் 6.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சலும் இடம்பெறும். (5-7)


---

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநா யகர் தேவஸ்தான மணவாளக் கோல உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணிய ளவில் (108) சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பிற்பகல் 5 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் திரு வூஞ்சலும் இடம்பெறும். (5-7)

## கந்தபுராண அருளுரை

நல்லூர் சின்மயாமிஷன் ஏற்பாட்டில் கந்தபுராண அருளுரை "கொடுங்கோல் ஆட்சி" என்னும் தலைப்பில் இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும். (5-7)



யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் இல்ல ... வல்லுநர் விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயருடன் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சந்திப்பு





(ஏறாவூர்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப்பை சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை காலை ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆயருடன் முன்னாள் முதலமைச்சர் கலந்துரையாடினார்.

குறிப்பாக இன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறு இருவரும் அழைப்பு விடுத்தனர்.

மேலும் ஜெனிவா மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடியதுடன், கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் நெருக்கடிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (இ-7)



வதிரி திரு.இருதயக் கல்லூரிக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் வேகமாக வந்த வாகனம் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. (படம்:மகாலிங்கம்)

## செய்தித் திருத்தம்

நேற்று (18.03.2019) 7 ஆம் பக்கத்தில் "சிங்கள மக்களுக்கு உள்ள அதே அபிமானம் தமிழ் மக்களுக்கும் உண்டு" என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உரையாற்றியதாக வெளியான செய்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். (ஆ-ர்)

# வடக்கில் மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்க ஐம்பது ஆயிரம் புதுமரக்கன்றுகள் விநியோகம்

## பிராந்திய முகாமையாளர் சஞ்சீவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் வடமாகாணத்தில் மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்க இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தால் 50 ஆயிரம் புதுமரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாணப் பிராந்திய முகாமையாளர் லோ.சஞ்சீவன் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம் மாவட்டங்களில் வவுனியாவில் மட்டுமே அதிகப்படியாக 250 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை இடம்பெற்று வருகின்றது.

ஒட்டுக்கன்று, விதைக்கன்று என இரு பிரதான பிரிவுகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒட்டுக்கன்று ஏக்கருக்கு 25X25 இடைவெளி 70 மரக்கன்றுகளும், விதைக்கன்றுகள் ஏக்கருக்கு 30X30 இடைவெளியில் 40 மரக்கன்றுகளும் நடுகை செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தில் 75 ஏக்கருக்கு 3 ஆயிரத்து 750 மரமுந்திரிகைக் கன்றுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 175 ஏக்கருக்கு 10 ஆயிரம் மரக்கன்றுகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 250 ஏக்கருக்கு 13 ஆயிரம் மரக்கன்றுகளும் மன்னார் மாவட்டத்தில் 200 ஏக்கருக்கு 8 ஆயிரத்து 750 கன்றுகளும் வவுனியா மாவட்டத்திற்கு 250 ஏக்கருக்கு 14 ஆயிரத்து 500 மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதோடு அனைத்து மரக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# போதைப்பொருள் குற்றவாளிகளின் வீழ்ச்சியைத் தீர்மானிக்கும் நாட்களாக எதிர்வரும் நாட்கள் அமையும்-லதீப்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களின் வீழ்ச்சியைத் தீர்மானிக்கும் நாட்களாக எதிர்வரும் நாட்கள் அமையும் என விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எம்.ஆர்.லதீப் தெரிவித்தார்.

"போதைக் குற்றவாளிகளின் கைதுகள், ஆயுத மீட்புக்கள், பணம் மற்றும் போதைப்பொருள் மீட்புக்கள் எதிர்வரும் சில நாட்களில் அதிகமாகவிருக்கும்" எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி டுபாய் சட்டம் ஒழுங்கு அதிகாரிகளால் மாகந்துரே மதூஷ் கைது செய்யப்பட்ட பின்னர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லதீப் தலைமையில் விசேட அதிரடிப்படையினர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலரை கைது செய்திருப்பதுடன், 16.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போதைப் பொருட்களை நாட்டிலிருந்து மீட்டுள்ளனர்.

"சட்டவிரோதமான போதைப் பொருள் வர்த்தக செயற்பாடுகளை நாம் ஏற்கனவே முடக்கியுள்ளோம். குற்றவாளிகளால் தமது போதைப்பொருட்களை சந்தைக்கு வழங்க முடியாமல் இருக்கின்றனர்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சகல போதைப்பொருள் குற்றவாளிகள், போதைப் பொருளால் ஈட்டப்படும் பணம், ஆயுத முகவர்கள், பணமோசடியில் ஈடுபடுபவர்கள் என பல்வேறு குற்றவாளிகளை முடக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பாக மாகந்துரே மதூஷ் மற்றும் கொஸ்கொட சுஜி ஆகிய இரண்டு போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்த குழுவினரே கைதுசெய்யப்பட்டு முடக்கப்பட்டுள்ளனர்.

மாகந்துரே மதூஷ் கைது செய்யப்பட்டு டுபாய் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதுடன், கொஸ்கொட சுஜி இந்தக் கைது விடயத்தை அறிந்து டுபாயில் உள்ள தனது வீட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். மதூஷ் மற்றும் சுஜி ஆகிய இருவரும் நாட்டில் இடம்பெறும் போதை சம்பந்தமான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்களாக இருக்கின்றனர். இவர்களின் செயற்பாடுகளை அவதானித்து வருவதுடன், எதிர்வரும் நாட்கள் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு வீழ்ச்சியான நாட்களாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### பல்வேறு பிரச்சினைகள் காரணமாக

# ஆண்டுதோறும் ஆயிரம் பிக்குகள் காவியுடை களைவு

(கொழும்பு)

வருடாந்தம் சுமார் ஆயிரம் பௌத்த பிக்குகள் காவியுடைகளை களைந்து விடுவதாக அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த பிக்குகளை பாதுகாப்பதற்கான திட்டமொன்று உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்தை பாதுகாக்கும் நோக்கில் விகாரைகளை அபிவிருத்தி செய்யும் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாக ஆண்டுதோறும் ஆயிரம் வரையிலான பௌத்த பிக்குகள் சீருடைகளை களைந்து லௌகீக வாழ்க்கைக்குத் திரும்பி விடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


# கல்யாணமாலை


## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 31 உயரம்: 5’8”<br>தகைமை/தொழில்:Dip.in Teaching,B.Ed, அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: A/L, பட்டதாரி, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/1000 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 48 செவ் 12 இல்<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில் BA பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/3011 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 61 செவ் 8 இல்<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்: A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் விரும்பத்தக்கது, தொழில் இல்லாதவர்களும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/1010 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 12 ¼ உயரம்: 5’<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:O/L, தனியார், சொந்த தொழில்<br>தொ.இ: G/3016 |
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 15 ¼ உயரம்: 5’5”<br>தகைமை/தொழில்:A/L,சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/1031 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 19 செவ் 4 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:B.Sc, M.Phill, Phd Following<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/3038 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 31 ¼ உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்:A/L,அரச ஆய்வு கூட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/1064 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 58 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L,அரச எழுதுவினைஞர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/3041 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2019 முதல் 13.04.2019 வரை



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நில்கலைள ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. உங்களுக்கு ஒரு பெரிய யோகம் என்னவென்றால் 4 ஆம் இடத்தில் இதுவரை சஞ்சரித்து வந்த குருபகவான் அதிசார கதியில் 5 ஆம் இடத்திற்கு மாறுவதுதான். அதன் விளைவாக தனுசு இராசியிலிருந்து 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியின் மீது குருவின் பார்வை பதிகின்றது. எனவே இனிமேல் நல்ல நேரம் தொடங்கப் போகிறது.

வசதி வாய்ப்புகள் பெருகும். வருமானம் திருப்தி தரும். உடலை விட்டு அசதிகள் அகலும். அனைத்துக் காரியங்களும் சிறப்பாக நடைபெறும். குறிப்பாக கல்யாணத் தடைகளை அகற்றுவதும் புத்திரப் பேறு வாய்க்க வழி வகுப்பதும் குருபகவானின் பார்வை பலம்தான். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இப்பொழுது உங்கள் இல்லத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடப் போகின்றது. பங்காளிகள் பகையும் மாறும். பக்கத்தில் இருப்பவர்களின்பகையும்மாறும். தொழில் சூடு பிடிக்கும். தொகை வருவதில் இருந்த தடை தாமதம் அகலும். மனை கட்டிக் குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும்.

மாறுபட்ட கருத்துடையோர் மனம் மாறுவர். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும் தலைமைப் பதவிகளும் கூட தானாக வந்து சேரலாம். செய்யும் தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஆன்மீக வழிகாட்டிகளின் ஆலோசனை அவ்வப்போது கைகொடுக்கும். திருப்பணிகள் செய்து புகழ் பெறுவீர்கள்.

பஞ்சம ஸ்தானம் என்ற 5 ஆம் இடத்தில் கேதுவும் இலாப ஸ்தானமான 11 ஆம் இடத்தில்

### குரு பார்வை பதியும் நேரம்!

ராகுவும் இருப்பதால் வாரிசுகளின் வளர்ச்சி கண்டு பெருமைப் படுவீர்கள். அவர்களின் எண்ணங்கள் ஈடேறவும் வழி பிறக்கும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல்கள் வந்து சேரும். தைரியகாரகரான செவ்வாய் இப்பொழுது மேஷ இராசியில் தனது சொந்த வீட்டில் பலம் பெற்றிருப்பதால் துணிவும் தன்னம்பிக்கையும் கைகூடும். விலகிச் சென்ற சொந்தபந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பூமி சேர்க்கை ஏற்படும். புதிய பாதையில் பயணம் செய்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வதற்கேற்ப உங்கள் தசா புத்தியும் சுய ஜாதகமும் ஒத்துழைக்கும் பட்சத்தில் வெற்றிகரமான வாழ்க்கை அமையும் எனவே இம்மாதம் தசாபுத்திக்கு ஏற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டு வளமான வாழ்வைப் பெறலாம்.

வியாழன் தோறும் குருவின் சந்நிதியில் நின்று வழிபடுவதோடு பங்குனி உத்திர நாளில் முருகப் பெருமானுக்கு முறையாக விரதம் இருப்பதும் அவரது திருப்புகழை பாடியும் வழிபாடுகள் செய்வதால் உங்களின் இருப்புத் தொகை உயரும்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

மார்ச் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் செவ்வாய் தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இடம் பூமி விற்பனை செய்வோர் ஏற்றம் பெறுவர். செய்யும் தொழிலில் முதலீடு செய்யப் பணம் இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். அரசு வழியிலும் கடனுதவி கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு பெரிய பொறுப்புகள் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய திருப்பங்கள் பலவும் காணப்போகிறீர்கள்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்ச் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3-10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது வாழ்க்கைத்துணையால்யோகம் உண்டு. அவர்கள் பெயரில் தொழில் நடத்துபவர்களுக்கு பொன்னான நேரமிது. வெளிநாட்டு முயற்சி கைகூடும். அதே நேரத்தில் உத்தியோகத்தில் இருக்கும் வாழ்க்கைத் துணையாக இருந்தால் ஊதிய உயர்வு கிடைக்கலாம். வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில்




தொடங்கும் எண்ணமும் கைகூடலாம். சொத்துக்களால் இலாபம் ஏற்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்**

ஏப்ரல் 8 ஆம் திகதி மீன இராசிக்குப்புதன் செல்கின்றார். புதனுக்கு அது நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியானவர் புதன். அவர் நீச்சம் பெறுவதால் பணப்புழக்கத்தில் தடைகள் வரலாம். இருப்பினும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களைக் கலந்தாலோசித்துச் செய்தால் பிரச்சினைகள் ஏற்படாது. மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்புகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. சேமிப்பில் கொஞ்சம் கரைந்தாலும் அதை ஈடு செய்யும் முயற்சியும் கைகூடும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கும் நேரமிது. இம்மாதம் ஞாயிறுதோறும் சூரிய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதம். குருவின் பார்வை இருப்பதால் குழப்பங்கள் தீரும். குதூகலம் கூடும். ஆரோக்கியத் தொல்லை அகலும். வாழ்க்கைத் துணையோடு ஏற்பட்ட வழக்குகள் தீரும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன் பிறப்புகள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர். வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தங்கம், வெள்ளி, ஆடை சேர்க்கை அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். இடம் வாங்க அல்லது வாகனம் வாங்க எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே அர்த்தாஷ்டம நிலையில் குரு பகவான் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அத்துடன் 4ஆம் இடத்திலேயே சனியும், கேதுவும் சஞ்சாரம் செய்கிறார்கள். எனவே, அர்த்தாஷ்டம ஸ்தானத்தில் குரு, சனி, கேது ஆகிய கிரகங்கள் ஒன்றாக இணைந்த நிலையில் அமர்ந்திருப்பதால் இம்மாதத்தில் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகமாகவே இருக்கும். பெற்றோர் வழியிலும் உற்றார், உறவினர் வழியிலும் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பணிபுரியுமிடத்தில் பிரச்சினைகளும் மாற்றங்களும் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

கிரகங்கள் சாதகமாக இல்லாத பொழுது வழிபாடுகள் ஓரளவு கைகொடுக்கும், கவலையை மாற்றும். திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லாமல் இருக்க உங்கள் சுய ஜாதக ரீதியான வழிபாடுகள் மற்றும் சிறப்புப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. எந்த நட்சத்திரம் உங்களுக்கு யோகமான நட்சத்திரம் என்பதை ஆராய்ந்து அது பலம் பெறும் நேரத்தில் அதற்கு உரிய ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டால் வாழ்க்கை நலம் பெறும்.

இந்த மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் வக்கிர இயக்கத்தோடு 6 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்தில் வரும் பொழுது யோகம் செய்யும் என்பது நியதி. அந்த அடிப்படையில் மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம்கிடைக்கும் ஆனால், மன நிம்மதி குறைவாகவே இருக்கும். அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் இருப்பதால்

### ஆரோக்கியத்தில் அக்கறை தேவை!

எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செயற்படுவது நல்லது. குடும்பப் பெரியவர்களை கலந்தாலோசித்த பின்னர் விடயங்களை செய்வதன் மூலம் சண்டை, சச்சரவுகளில்இருந்து விடுபட முடியும். வாகன மாற்றம், இட மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் தானாகவே வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின்வெறுப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். முன் யோசனையுடன் நீங்கள் செய்யும் செயல்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும். இது போன்ற காலங்களில் அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் உங்களுக்கு தேவை.

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனி, அர்த்தாஷ்டம குரு, அர்த்தாஷ்டம கேது ஆகிய கிரகங்களுக்கு பரிகாரமாக வியாழக்கிழமை குரு வழிபாடும், சனிக்கிழமை தோறும் சனி வழிபாடும், வெள்ளிக்கிழமை கேது வழிபாடும் செய்து வர வேண்டும். பங்குனி உத்திர நாளில் சண்முகநாதப் பெருமானை வழிபட்டு வந்தால் இல்லத்திலும் உள்ளத்திலும் சந்தோசம் நிலவும்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**


மார்ச் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கின்றது. ஓரளவு நற்பலன்கள் நடைபெறத்தொடங்கும்நேரமிது. உடன் பிறப்புகளின் வழியே ஏற்பட்ட பகை மாறும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். வழக்குகள், சாதகமாக முடியும். விற்க முடியாத சில சொத்துக்களை விற்பதன் மூலம் உங்கள் கைகளில் பணம் புரளும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்தில் மார்ச் 22 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புத-சுக்கிர யோகத்தின் விளைவாக வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும். பணி நிரந்தரம் ஆகாதவர்களுக்கு நிரந்தரப் பணிக்காகச் செய்த முயற்சி கைகூடும். கேட்ட இடத்திற்கு ஒரு சிலருக்கு மாறுதல் கிடைக்கும். போட்டிக் கடை வைத்தோர் விலகுவர். புதிய திருப்பங்கள் பலவும் ஏற்படும். பங்காளிப் பகை மாறும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பை கருதி சீர் வரிசைப் பொருட்களை சேர்க்க முற்படுவீர்கள். என்றைக்கோ செய்த உதவிக்கு நன்றி பாராட்டிய நண்பர்கள் வீடு தேடி வருவர். அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்என்று சொன்ன மருத்துவர்கள் இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே உங்கள்நோயைக் குணப்படுத்தலாம்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்**

ஏப்ரல் 8 ஆம் திகதி புதன்




நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியான புதன் நீச்சம் பெறும்பொழுது மிகுந்த கவனத்தோடு செயற்படுவது நல்லது. தொட்ட காரியங்களில் எல்லாம் துணையாக இருப்பவர்களே பகையாகலாம். பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. விமர்சனம் செய்வதால் வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும் பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையிலும் சிக்கல்கள் வரலாம்.

இம்மாதம் ராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வதோடு சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிலும் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டிய மாதமாகும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். தேவையில்லாமல் உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது கணவன்- மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமும், விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமும்மனநிம்மதியைக்காண இயலும்பிள்ளைகளை உங்கள்மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உற்றார், உறவினர்களிடம் பகை பாராட்ட வேண்டாம். தாய் மற்றும் சகோதரர்கள் மாதக் கடைசியில் உங்களுக்கு ஆதரவு தரலாம். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பணியாளர்களால் தொல்லைகளும் உண்டு. மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். அனுமன் வழிபாடு அல்லல்களைப் போக்கும்.

(தொடரும்)

## யாழிலிருந்து கட்டுநாயக்க சென்ற வான்–டிப்பர்

# புத்தளத்தில் கோர விபத்து! கர்ப்பிணி உட்பட நால்வர் பலி

## ஏழு பேர் படுகாயம்; இருவர் கவலைக்கிடம்








(புத்தளம்)

புத்தளம், நாகவில்லு பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் படுகாய மடைந்த எழுவரில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற ப்பட்டுள்ளனர்.

புத்தளம் நாகவில்லு பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த பாரிய விபத்துச் சம்பவத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் எழுவர் காயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்ற வான் ஒன்றுடன், எதிர்த் திசையில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்த குறித்த வான் நாகவில்லு பகுதியில் உள்ள ஹோட்டலில் நிறுத்தி விட்டு, மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி செல்ல முற்பட்ட போதே இந்த பாரிய விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் குறித்த வானில் பயணித்த சாரதி உட்பட பத்து பேருடன், வீதியோரத்தில் நின்ற மற்றுமொரு லொறியின் சாரதியொருவரும் பாகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் வானில் பயணித்த கர்ப்பிணித் தாய் உட்பட மூன்று பெண் களும், வீதியோரத்தில் நின்ற லொறியின் சாரதியும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். அத்துடன், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட எழுவரில் ஆண்கள் இருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நான்கு ஆண்களும், சிறுமி ஒருவரும் தொடர்ந்தும் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான வான் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், டிப்பர் வாகனமும், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு லொறியும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகன சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இலங்கை சேமிப்பு வங்கியின் புதிய பணிப்பாளராக சுதாகரன்



(கொழும்பு)

இலங்கை சேமிப்பு வங்கியின் புதிய பணிப்பாளராக ஆர்.சுதாகரன், நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் 38 வருடங்கள் இலங்கை வங்கியில் சேவை யாற்றி ஓய்வு பெற்ற அதிகாரி ஆவார்.

பாடசாலைகள் சேமிப்பு பிரிவு இணைப்பதிகாரியாக நீண்ட காலம் சேவையாற்றி நாடு முழுவதும் உள்ள 2000 பாட சாலைகளில் இலங்கை வங்கி சேமிப்பு பிரிவுகளை உருவாக் கியவர் என்பது குறிப்பிடத்தக் கது.

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியின் பழைய மாணவனும் முன்னாள் சிரேஷ்ட மாணவ முதல்வனுமாவார். (இ)

### பாலியல் குற்றச்சாட்டு எதிரொலி

## அரசியல் நடவடிக்கைகளிலிருந்து மாகாண சபை உறுப்பினர் விலகல்



(கொழும்பு)

"ரத்தராங்" எனப்படும் கிரிஷாந்த புஷ்பகுமார தென் மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் விலகிக்கொள்வதாக நேற்று அறிவித்துள்ளார்.

தென் மாகாண சபை உறுப் பினர் கிரிஷாந்த புஷ்பகுமார, கடந்தபெப்ரவரி 28 ஆம் திகதி அக்மீமன பொலிஸ் நிலையத்தில் ஆஜரானதையடுத்து கைது செய் யப்பட்டார். 16 வயது பாடசாலை சிறுமி ஒருவரை பாலியல் துஷ் பிரயோகம் செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

குறித்த பாலியல் துஷ்பிரயோ கம் பெப்ரவரி 26 ஆம் திகதி இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின் றது. கிரிசாந்த புஷ்பகுமார அக் மீமன நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டதை அடுத்து அவர் பிணை யில் விடுவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

## கடமை ஏற்பு




(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப் பற்றுறை மற்றும் தெற்கு அபிவி ருத்தி அமைச்சின் புதிய செயலா ளராக அட்மிரல் சிறிமெவன் ரண சிங்க கடமைகளை பொறுப்பேற் றுக்கொண்டார்.

முன்னாள் கடற்படை தளப தியான அட்மிரல் சிறிமெவன் ரணசிங்க நேற்றுத் திங்கட்கி ழமை கடமைகளை அமைச்சில் உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுக் கொண்டார். (இ-7)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய

# யாத்திரை திருவிழா முன்னாயத்தக் கூட்டம்





(பூநகரி)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய தவக்கால திருயாத்திரை திருவிழா நாளை புதன்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருவிழா திருப்பலியுடன் நிறைவு பெறும். திருவிழா ஒழுங்குகள் பற்றிய இரண்டாவது முன்னாயத்த ஒழுங்கமைப்புக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் பூநகரி பிரதேச செயலாளர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர் அ.ஜேசுதாசன், ஆலய பங்குத்தந்தை பூநகரி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை, பூநகரி உதவி பிரதேச செயலர் யோ.கிரிசா, கடற்படை, பொலிஸ் பிரிவு, தரைப்படை அதிகாரிகள், பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் யோ.பிரான்சிஸ், பூநகரி சுகாதார சேவைகள் பணிப்பாள் ப.கோகுலம் உட்பட பலர் கலந்து கொண்டு பல்வேறு தீர்மானங்களை எடுத்தனர்.

இதன்போது உற்சவ காலத்தில் 30 பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவார்கள் எனக் கூறப்பட்டது.

குடிநீர், மின்சார வசதி, சுகாதார சேவைகள் அனைத்தையும் பூநகரி பிரதேசசபையும் கடற்படையும் இணைந்து மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

கடல்வழிப்பயணத்தை முன்கூட்டியே உறுதி செய்வதோடு சிறிய படகுகளில் 9 பேருக்கு குறைவானவர்களே பயணிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருவிழா நிறைவுபெறும் 23 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்குப் பின்னர் எவரும் அங்கே தரித்து நிற்க அனுமதிக்கப்படமாட்டார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு மேற்குறிப்பிட்ட நேரகாலத்தினுள் திரும்பாதவர்கள் தீவில் எதிர்கொள்ளும் எவ்வித அடிப்படை தேவைகள் தொடர்பான இடையூறுகளுக்கும் ஏற்பாட்டாளர்கள் பொறுப்பல்ல எனத் தெரிவித்தனர்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் வருகை தரக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள், கர்ப்பிணி பெண்கள், வயது முதிர்ந்த பெரியவர்கள் கடல் வழிப்பயணத்தினை மிகவும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும்.

குடிநீர் பற்றாக்குறை ஏற்படாதவாறு நீரினை சுத்தமாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும்.

பொது சமையலுக்குரிய இடங்கள், தேநீர், உணவுச்சாலைகளை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

குப்பைகளை உரிய குப்பைத்தொட்டிகளில் இடுதல், பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையினை கூடிய மட்டும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

விற்பனை நிலையங்கள் அமைக்கவுள்ளவர்கள் பூநகரி பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு அமைதி பெறவேண்டும்.

திருவிழாவில் பங்கு கொள்ளும் யாத்திரிகர்கள் அனைவரும் கடமை புரியும் அரச பணியாளர்களின் அறிவுறுத்தல்களுக்கும், ஆலோசனைகளுக்கும் மதிப்பளித்து இவ்வருட ஆலய திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கடல்வழி பயணத்தின் போது பாதுகாப்பு கவசங்களை கொண்டு செல்ல வேண்டும். (2-84)




# பாலைதீவில் இறங்குதுறை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

## திருவிழா நிறைவு பெற்றதும் வேலைகள் ஆரம்பம்

(பூநகரி)

பாலைதீவில் இறங்கு துறை அமைப்பதற்காக் கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களத்தால் இறங்குதுறை அமைப்பதற்காக ஐந்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றேழு ரூபா (5,57,897) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை பாலைதீவு ஆலய உற்சவம் முடிவடைந்த பின் இறங்குதுறை வேலைகள் ஆரம்பமாகும் என சம்பந்தப்பட்ட அலுவலகரால் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு இறங்குதுறை இல்லாத யாத்திரிகர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# கண்ணகை அம்மன் ஆலய பங்குனித்திங்கள் வேள்வி

(சிவநகர்)

கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் வேள்வி எதிர்வரும் பங்குனித்திங்கள் 01.04.2019 திங்கட்கிழமை பகல் இரவு மறுநாள் அதிகாலை வரை வழமை போல் வேள்விவிழா நடைபெறவுள்ளது.

அபிஷேகம், கொடியேற்றுதல் வைபவம், பூசைகள் பகல் இரவு முழுநாளும் காவடி, பாற்செம்பு கற்பூரச்சட்டி, பறவைக் காவடிகள் இரவு அம்பிகை திருவீதியுலா வருதல்,பொங்கல்,காவடி,தீமிதிப்பு, அதிகாலையில் விசேட பூசை நீர்ச்சோறு வழங்கல் என்பன நடைபெறவுள்ளது.

அடியார்கள் திங்கட்கிழமை பகல் இரவு முழுநாளும் காவடி , பாற்செம்பு,கற்பூரச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திகளைச் செலுத்தி அர்ச்சனைகள் செய்து கொள்ள முடியும்.

அத்துடன் வணிக நிறுவனங்கள் கடை அமைப்பதற்கான ஏலம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் மறுநாள் 28ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பி.ப.6 மணிவரை நடைபெறுமெனவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்து இடங்களிலிருந்தும் போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (2-254)

# 97 பயனாளிகளுக்கு வீடுகள் அமைக்க பணம் வைப்பிலிடல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 97 பயனாளிகளிற்கான வீட்டுத் திட்டம் அமைத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் ரமேஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படும் 9 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முதல்கட்ட பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாக உதவி பிரதேச செயலாளர் தெரிவித்தார். வீடு அமைப்பதற்கான மணலை பெற்றுக்கொள்வதற்காக ஏப்ரல் முதலாம் திகதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2)

## விளைச்சல் அதிகரித்துள்ள போதிலும்

# நெல்மூடைகளை விற்பனை செய்வதில் திண்டாட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் இம்முறை நெல் விள்ளச்சல் அதிகரித்த போதிலும் நாம் அறுவடை செய்த பெருந்தொகையான நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலையில் பெரும் சிரமமடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சென்ற ஆண்டில் ஒரு மூடை நெல் 3 ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில் இவ்வருடம் 2 ஆயிரம் ரூபாவுக்கும் விற்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

நாம் விவசாயத்திற்காக பெற்ற கடனை செலுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமே முற்றாக நெல் கொள்வனவில் ஈடுபடாத நிலையில் கூட்டுறவாளர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# ஆதரவற்ற சிறுவர்களுக்கு அரபாநகரில் இல்லம் திறப்பு




(குருமன்காடு)

வவுனியா அரபாநகரில் ஆதரவற்ற இஸ்லாமிய சிறுவர்களுக்கான சிறுவர் இல்லம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த சிறுவர் இல்லத்தினை வாமி நிறுவனத்தின் அனுசரணையில் நூர் நிறுவனத்தினால் ஏழு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மௌலவி கே.எம்.அஜாத்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ் வில் வாமி நிறுவனத்தின் சவுதி தலைமையகத்தின் உத்தியோகத்தர்கள், வாமி நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் நஜிமான் சாகீப், ஜஎஸ்ஆர்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜனாப் மிகிலார் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்டம் புனரமைப்பு 600 ஏக்கரில் உப - உணவுப் பயிர்ச் செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் 33 வருடங்களுக்குப் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்டு 600 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இரணைமடு நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் பெருமளவான மக்கள் நன்மையடைந்தனர்.

1985ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மேற்படி ஏற்றுநீர்ப்பாசனத்திட்டம் செயலிழந்து காணப்பட்டது.

தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் பாரிய அபிவிருத்தி வேலைகள் இரணைமடுக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட சம நேரத்தில் திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத்திணைக்களம் 1986ஆம் ஆண்டு கைவிடப்பட்ட திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் தற்போது புனரமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இம்முறை 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உபஉணவுப் பயிர்கள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதனை உரிய முறையில் பயன்படுத்துவ[illegible] விவசாயிகள் முன்வர வேண்டுமென்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-315)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

கிளி/பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் முன்னேற்றம் கருதி அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் இவ்வாண்டு இடம்பெறவுள்ள இப்பாடசாலையின் பொன் விழா நிகழ்வு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கிளி/ கனகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் அ.றெஜி அலோசியஸ் அறியத்தந்துள்ளார். (2-254)




### மத ரீதியான நல்லெண்ணத்தை கட்டியெழுப்பும் நோக்கில்

# வெலிகம சர்வதேச குழுவினர் மன்னாருக்கு இரு நாட்கள் விஜயம்



(மன்னார்)

சமய சகவாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள மதம் சார்ந்து செயற்படும் குழுக்களிடையே பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் மாத்தறை மாவட்டத்திலுள்ள வெலிகம பிரதேசத்தை சேர்ந்த சர்வமத குழுவினர் மன்னார் மாவட்டத்திற்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள மத ரீதியான முரண்பாடுகள் தொடர்பாகவும் மத ரீதியான நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளும் முகமாகவும் நேரடியாக திறந்த மத கலந்துரையாடல்களுக்கு வழிசமைக்கும் வகையில் குறித்த விஜயம் இடம் பெற்றுள்ளது.

இந் நிகழ்வில் மன்னார் சமூக பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், சமூக ஆர்வளர்கள், அரச சார்ப ற்ற நிறுவன ஊழியர்கள், கிராம சேவகர்கள் மதம்சார் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த விஜயத்தின் ஒரு பகுதியாக நேற்றுக் காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட சர்வமத பிரதிநிதிகளுக்கும் வெலிகம பகுதி சர்வமத பிரதிநிதிகளுக்கும் விசேட ஒன்று கூடல் இடம் பெற்றது. குறித்த ஒன்று கூடலின் போது பல்வேறுபட்ட மதம் சார்ந்த நிகழ்வுகளும் அனுபவபகிர்வுகளும் இடம் பெற்றதுடன் மன்னார் மாவட்டத்தில் உள்ள மதம் சார்ந்த பிரசித்தி பெற்ற மத ஸ்தலங்களுக்கு விஜயம் செய்யவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-285)

## திரிபீடக வந்தனா வாரம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

### பௌத்த கொடிகளை பறக்கவிடுமாறு வேண்டுகோள்



(குருமன்காடு)

தூய பௌத்த போதனைகள் உள்ளடங்கிய தேரவாத திரிபீடகத்தை உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்துவதற்கான திரிபீடக வந்தனா வாரம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக 16 ஆம் திகதி முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை திரிபீடக வந்தனா (புனித திரிபீடக) வாரமாக நாடு முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம், புத்த தாசன அமைச்சு, வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்பன ஏனைய அமைச்சுக்களுடன் இணைந்து இந்த திரிபீடக வந்தனா வாரத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இவ்வாரம் முழுவதும் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், இல்லங்கள், வாகனங்கள், வீதிகள் எங்கும் பௌத்த கொடியை காட்சிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரம் மற்றும் வவுனியாவின் பல பகுதிகளிலும் வீதிகளில் பௌத்த கொடி காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அரச திணைக்களங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையம் என்பவற்றிலும் பௌத்த கொடிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தேரவாத திரிபீடகத்தை உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்துமாறு யுனெஸ்கோ தாபனத்திற்கு உலக அனைத்து பௌத்த நாடுகளினதும் ஒத்துழைப்புடன் இலங்கை முன்மொழிவை சமர்ப்பிக்கும் தேசிய மஹோற்சவம் மூன்று நிக்காயக்களின் மகாநாயக்கர்கள் உள்ளிட்ட மகாசங்கத்தினரின் முன்னிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்குபற்றுதலில் எதிர்வரும் 23 ஆம் திகதி கண்டி தலதா மாளிகையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## ஊர்மனைக்குள் நுழைந்த யானைகள் பயன்தரும் மரங்களை அழித்தன

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஐயன்கன் குளம், பழைய முறிகண்டி, புத்து வெட்டுவான், தேறாங்கண்டல் ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றதால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று இரவு ஐயன்கன்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களுக்குள் நுழைந்த காட்டுயானைகள் பெருமளவான பயன்தரும்மரங்களை அழித்துள்ளதுடன் ஊர் மனைக்குள் பெரும் அட்டகாசம் செய்துள்ளன.

இதனால் இரவு வேளை முழுவதும் அச்சத்துடனேயே இருந்ததாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான நிரந்தரத் தீர்வு ஒன்றினைப் பெற்றுத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## நில அளவுகள் தீர்மானிக்கப்பட்டு விவசாயிகள் சிறுபோக பயிர்ச்செய்கை

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சிறுபோக பயிர்ச் செய்கைக்கூட்டங்கள் நடைபெற்று அதற்கான பயிர்ச்செய்கை நிலஅளவுகள் தீர்மானிக்கப்பட்டதுடன், விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீண்ட வரட்சிக்குப்பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசனக்குளங்களில் நீர் மட்டம் அதிகரித்த நிலையில் 25 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களுக்கான பயிர்ச் செய்கை கூட்டங்கள் நடைபெற்று அவற்றுக்கான பயிர்செய்யும் நிலப்பரப்புக்கள் தீர்மானிக்கப் பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் அக்கராயன்குளத்தின் கீழ் 2790 ஏக்கரும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 500ஏக்கரும் குடமுருட்டிக்குளத்தின்கீழ் 322 ஏக்கரும் புதுமுறிப்புக்குளத்தின் கீழ் 850 ஏக்கரும், வன்னேரிக் குளத்தின் கீழ் 121 ஏக்கரும் இரணைமடுக்குளத்தின்கீழ் 15 ஆயிரம் ஏக்கரும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கனகாம்பிகைக் குளத்தின்கீழ் 220ஏக்கர் நிலப்பரப்பிலும் பிரமந்தனாறுக் குளத்தின்கீழ் 450 ஏக்கரிலும் சிறு தானியச்செய்கைகளுக்காக தீர்மானிக்கப்பட்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (2-315)

## வெளிச்சவீடுகள் அமைக்கப்படாமையால் தொழிலுக்குச் செல்வோர் இடர்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி கிராஞ்சிப் பிரதேசத்திற்குட்பட்ட இலவங்குடா, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல்தொழிலுக்குச்சென்று கரைதிரும்புவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருவதாகவும் இந்த இடர்பாடுகளை தவிர்க்கும் முகமாக கிராஞ்சி கடற்றொழில் எல்லைக்குட்பட்ட இலவங்குடா மற்றும் காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத்தருமாறு மீனவர்கள் கோரியுள்ளனர்.

குறித்த கோரிக்கையானது தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றபோதும் இதுவரை வெளிச்சவீடுகள் அமைக்கப்பெறவில்லை என பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா பாடசாலை முதன்மை ஆசிரியர் ராஞ்சி தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போது....

# பாரதம்

## பொள்ளாச்சி பாலியல் விவகாரம்

# துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி தாருங்கள்

### மாவட்ட ஆட்சியாளரிடம் மாணவிகள் மனு



(பொள்ளாச்சி)

பொள்ளாச்சி கொடூரத்தால் நாங்கள் மிகுந்த அச்சத்தில் இருக்கிறோம். எனவே, எங்கள் பாதுகாப்புக்கு துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி கொடுங்கள்' என, கோவை மாவட்ட ஆட்சியரிடம் மாணவிகள் மனு கொடுத்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாணவிகள்இருவரும்கோவை மாவட்ட ஆட்சியர் ராஜாமணியிடம் கோரிக்கை மனு ஒன்றை வழங்கினர். அந்த மனுவில் "பொள்ளாச்சி வன்புணர்வு சம்பவம் 7 ஆண்டுகளாக நடைபெற்று வந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஈடு பட்டவர்களை பார்க்கும் போது, எங்களுக்கு மிகுந்த அச்சமாக வும் பயமாகவும் உள்ளது.

எனவே, எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கி றோம். அதற்கு, துப்பாக்கி வைத்துக் கொள்ள எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்" என்று, கூறப்பட்டிருந்தது. (7)

# கோவா முதல்வரின் மறைவிற்கு தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பு

(கோவா)

கோவா மாநிலத்தின் முதலமைச்சரின் மறைவையொட்டி (இன்று) நேற்று திங்கட்கிழமை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த மனோகர் பாரிக்கர் நேற்று கோவாவில் காலமானார். இந்நிலையில், (இன்று) நேற்று தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



அவரது மறைவுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இரங்கல் தெரிவித்துள்ளார். அவரது இரங்கல் செய்தியில், "கட்சி பாகுபாடுகளை கடந்து அனைவராலும் மதிக்கப்பட்டவர் மனோகர் பாரிக்கர். கடுமையான நோயுடன் துணிவுடன் போராடினார். கோவாவின் தவப் புதல்வர்களில் அவரும் ஒருவர்" என தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவரின் மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உட்பட பிரதமர் நரேந்திர மோடி, போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (7)

# எதியோப்பிய-இந்தோனேசிய விமான விபத்துக்களில் தெளிவான ஒற்றுமை

### போக்குவரத்து அமைச்சர் தகவல்

எதியோப்பிய விமான விபத்திற்கும், கடந்த ஒக்டோபரில் நடந்த இந்தோனேசிய லயன் எயர் விமான விபத்திற்கும் இடையே தெளிவான ஒற்றுமை காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அமைச்சினால் மேற்கொளளப்பட்ட விசாரணைகளில் இது கண்டறியப்பட்டுள்ளதாக எதியோப்பிய போக்குவரத்து அமைச்சர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

விபத்திற்குள்ளான விமானங்களின் கறுப்புப் பெட்டி தகவல் பதிவுகளின் மூலம் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் விபத்திற்குள்ளான எதியோப்பிய விமான விபத்து தொடர்பான முதற்கட்ட அறிக்கை 30 நாட்களில் வெளியிடப்படும் எனவும் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (7)

# துப்பாக்கிச் சட்டத்தைச் சீர்திருத்த அமைச்சரவை ஆதரவளித்துள்ளது

### நியூசிலாந்து பிரதமர் அறிவிப்பு

துப்பாக்கி சட்டத்தை சீர்திருத்துவதற்கு அமைச்சரவையின் ஆதரவு கிடைத்துள்ளதாக, நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் 50 பேரின் உயிரை காவுகொண்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம், துப்பாக்கி சட்ட சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தது.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதமர் இதனை அறிவித்துள்ளார்.

அரை தானியங்கி துப்பாக்கிகளை தடை செய்ய வேண்டும் என நியூசிலாந்து பொலிஸ் சங்கம் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# மொசாம்பிக்-சிம்பாவே
# பலி எண்ணிக்கை 12

(மபுடோ)

மொசாம்பிக், சிம்பாவே ஆகிய பகுதிகளை தாக்கிய இடாய் சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் கடும் காற்றின் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 125 ஆக உயர்ந்துள்ளது.



இதில் பலர் காணாமல் போயுள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மொசாம்பிக்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளதுடன், சிம்பாவேயில் 65 பேர் உயிரிழந்துள்ளனர்.

மொசாம்பிக் குடியரசு எதிர்கொண்ட மிக மோசமான இயற்கை பேரழிவாக இந்த சூறாவளி அமைந்துள்ளது.

மொசாம்பிக்கில் அனைத்தும் அழி
உயிரை
வழங்கி
அமைச்சர்
இடாய் சூ
தாக்கியது.
நோக்கி

# கலவர பூமியானது பி
# 60 இற்கு மேற்பட்டோ

## 120 பேர் கைது

(பரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மஞ்சள் உடை போராட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தில் சிக்கி 17 பொலிஸார் உட்பட 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பிரான்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் பரிஸ் நகரமே போர்க்களம் போல் காட்சி அளித்தது. இந்த வன்முறையில் 120பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மஞ்சள் உடை போராட்டத்தில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஈடுபட்டனர். இந்நிலையில், திடீரென போராட்டத்தின் போது கலவரம் வெடித்தது.

பிரான்சில் பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரியை பிரான்ஸ் நாட்டு அரசாங்கம் உயர்த்து





வதாகத் தெரிவித்ததைத் தொட
அங்கு மாபெரும் போராட்டம்
இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், கார் சார
திகளின் மஞ்சள் உடையை

# நியூசிலாந்து துப்பாக்கிச்சூ
# சமூக ஊடகங்களின் கறு

### பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவ

(லண்டன்)

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும்போது சமூக வலைத்தளங்கள் பொறுப்புடனும் துரிதமாகவும் செயற்படுவது அவசியம் என பிரித்தானிய எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் ஜெரமி கோர்பின் வலியுறுத்தியுள்ளார்.

நியூசிலாந்து துப்பாக்கிதாரி நடத்திய தாக்குதல் காணொளி சமூக ஊடகங்களில் நீண்ட நேரம் ஒளிபரப்பப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சம்பவமானது, சமூக ஊடகங்கள்
குட்படுத்துவ
ஊடகங்களி
வதாகவும்

50 பே
துப்பாக்கிச்
நீண்ட நேர
இது பாரிய
ளையும் ஏற்

# வெளிநாடு

## ...வேயில் சூறாவளி ... 125 ஆக உயர்வு!



...ும் அழிந்துள்ளன. இந்நிலையில், மனித ...யிரை காப்பாற்றுவதற்கு தாம் முன்னுரிமை ...வழங்கி செயற்பட்டு வருவதாக சுற்றாடல் அமைச்சர் தெரிவித்தார். மொசாம்பிக் குடியரசை ...டாய் சூறாவளி கடந்த வியாழக்கிழமை இரவு ...ாக்கியது. அதனை தொடர்ந்து சிம்பாவேயை நோக்கி ஊடுருவியது.

சிம்பாவேயில் கிழக்கு சிமனி மணி மாவட்டமே நாட்டில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாகும். குறித்த பகுதியில் வீடுகள், போக்குவரத்து மார்க்கங்கள்என அனைத்து வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. (7)

## இந்தோனேசியாவில் இயற்கை கோர தாண்டவம்

### உயிரிழப்பு 70 ஆக உயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பபுவா மாகாணத்தில் நேற்று முன்தினம் பெய்த கனமழைக்கு 70 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பப்புவா மாகாணத்தில் நேற்று முன்தினம் கனமழை கொட்டித்தீர்த்தது. இடைவிடாது பெய்த மழையால் நீர்நிலைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்தது.





இதனால் தலைநகர் ஜெயபுரா மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகள் வெள்ளக்காடாகின. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில்மூழ்கின. கனமழை மற்றும் வெள்ளத்தை தொடர்ந்து பல இடங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

வீதிகளில் பாறைகள் உருண்டு விழுந்ததாலும், மரங்கள் வேரோடு சாய்ந்ததாலும் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அத்துடன் மின் இணைப்பு மற்றும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

கனமழை, வெள்ளம் மற்றும்நிலச்சரிவில்சிக்கி இதுவரை 70 பேர் பலியாகி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. கடந்த ஜனவரி மாதம் சுலவேசி மாகாணத்தில் கனமழை, வெள்ளம் மற்றும் அதனை தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட்டதில் 70 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (7)

## ... பிரான்ஸ்! ...டோர் காயம்





...த் தொடர் ...ராட்டம் .... ...ார் சார ...டையை

அணிந்து கொண்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் குறித்த போராட்டம் 'மஞ்சள் உடை போராட்டம்' என அழைக்கப்பட்டது. (7)

## புல்வாமா தாக்குதல்

## பாகிஸ்தான் அரசிற்கு எதிராக இந்தியர்கள் மீள ஆர்ப்பாட்டம்

(புல்வாமா)

பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்காவின் ஹஸ்டன் நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 300இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்றனர்.

கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் 40 சி.ஆர்.பி.எப். வீரர்கள் உயிரிழந்தனர்.இந்த தாக்குதலுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்க வேண்டும் என்று ஐ.நாவில் முறையிட்டன. ஆனால் வழக்கம்போல் சீனா அதை தடுத்துவிட்டது.

இதற்கிடையில் தாக்குதலை கண்டித்து அமெரிக்காவின் ஹஸ்டன் நகரில் கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து ஹஸ்டன் நகரில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் 300-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்றனர். "தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் மாறி வருகிறது. அல் கொய்தா தலைவர் ஒசாமா பின் லேடன் பாகிஸ்தானில் பதுங்கி இருந்தார்.

லண்டன் குண்டுவெடிப்பு, கலிபோர்னியாவில் நடந்த தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத தாக்குதல்களில் பாகிஸ்தானுக்கு தொடர்பு உள்ளது. உலகின் எந்த மூலையில் தாக்குதல் நடந்தாலும் அதில் பாகிஸ்தான் தீவிரவாத குழுக்கள் பின்னணியில் உள்ளன. தீவிரவாதத்தை தடுக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (7)




## மாலியில் பயங்கரவாதிகள் தாக்குதல் 16 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

மாலி நாட்டின் மத்திய பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய ஆவேச தாக்குதலில் 16 வீரர்கள் உயிரிழந்தனர். மாலி நாட்டின் பல பகுதிகளில் முன்னர் அல் கொய்தா பயங்கரவாத இயக்கத்தில் இருந்து பிரிந்துவந்த பல்வேறு ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் குழுவினர் அந்நாட்டில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை நடத்த வேண்டும் என்ற வன்முறை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மாலி நாட்டின் மத்திய பகுதியில் உள்ள முப்போட்டி பிராந்தியத்தின் டியோரா பகுதியில் உள்ள ராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வீசியும் துப்பாக்கிகளால் சுட்டும் நடத்திய தாக்குதலில் அந்த முகாம் முழுவதும் தீக்கிரையானது. இதில் 16 வீரர்கள் உயிரிழந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## ...சூட்டு சம்பவம் ...றுப்புப் பக்கம்

### ...லவர் கண்டனம்

...டகங்களின் ஒழுங்குமுறையை கேள்விக்...படுத்துவதாக அமைந்துள்ளதெனவும் சமூக ...டகங்களில் இருண்ட பக்கங்கள் காணப்படு...ாகவும் அவர் கூறியுள்ளார்.

...50 பேரைக் காவுகொண்ட நியூசிலாந்து ...பாக்கிச் சூட்டுச் சம்பவம் சமூக ஊடகங்களில் ...ீட நேரம் தொடர்ச்சியாக ஒளிபரப்பப்பட்டது. ... பாரிய விமர்சனங்களையும் கண்டனங்க...ையும் ஏற்படுத்தியுள்ளது. (7)

## சீனாவில் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் பலி; 10 பேர் மாயம்



சீனாவின் ஷான்சி மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 10 பேர் பலியாகினர் என்றும், மேலும் 10 பேர் மாயமாகினர் என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். சீனாவின் ஷான்சி மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் லின்பென் சிட்டி பகுதியில் உள்ள வீடுகள் இடிந்து விழுந்தன. கட்டட இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர். தகவலறிந்து மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், (இன்று) நேற்றுக் காலை கட்டட இடிபாடுகளில் இருந்து 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும், 3 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதையடுத்து, நிலச்சரிவில் மொத்தம் 10 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 10 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகிறது என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (7)

# பௌத்த போதனையைப் பாதுகாக்கும் பொறுப்பை சரிவர நிறைவேற்றுவேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி





(குளியாப்பிட்டிய)

தேரவாத திரிபீடகத்தை உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தும் முன்மொழிவுக்கு முன்னர் "திரிபீடகாபிவந்தனா" வாரத்தை பிரகடனப்படுத்தியதன் நோக்கம் நாட்டினுள் பௌத்த புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு திரிபீடகம் தொடர்பிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குமேயாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.





உன்னத பௌத்த போதனையைப் பல்வேறு விதமாக விபரிப்பதற்கு சில பிரிவினர் முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது தனக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, தான் ஜனாதிபதி என்ற வகையிலும் பௌத்தன் என்ற வகையிலும் பௌத்த போதனையின் பாதுகாப்பையும் அதன் எதிர்காலப் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு தனது கடமையை சரிவர ஆற்றுவதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் குளியாப்பிட்டிய, நெவகட, உடுபத்தாவ செல்கிரி விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்லினாலான புத்த பகவானின் திருவுருவச்சிலையை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# திருகோணமலைத் துறைமுகத்தில் 2 அவுஸ்திரேலிய போர்க்கப்பல்கள்

அவுஸ்திரேலிய கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்தை சென்றடைந்தன.

இரண்டாம் உலகப் போரின் போது, மட்டக்களப்புக்கு அப்பால் மூழ்கிய அவுஸ்திரேலியப் போர்க் கப்பலை இலங்கைக் கடற்படையின் உதவியுடன் இணைந்து மீட்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அவுஸ்திரேலியக் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் கடந்த 11 ஆம் திகதி இலங்கை வந்தன.



இந்தக் கப்பல்கள், நேற்று முன்தினம் திருகோணமலைத் துறைமுகத்துக்கு சென்றன.

இந்தக் கப்பல்கள் நாளை 20 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லவுள்ளன. (இ-7)

# கட்சி, நிறம் வேறுபாடுகளின்றி அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் போது கட்சி, நிறம், சாதி மற்றும் மத பேதங்கள் களைந்து நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டுமெனவும் அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் இவ் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதே உண்மையான அபிவிருத்தி என, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை தெற்கு அபிவிருத்தி அமைச்சருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

பல்வேறுபட்ட திசைகளில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்நாட்டிற்கு நன்மை பயக்கின்றன. இது நாட்டின் பொருளாதாரத்தை வலிமையாக்குவதுடன், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்தார். தெனியாவ நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## திறமைக்குப் பாராட்டு

ஒருத்தர் பரிசு கொடுத்தால் என்ன அர்த்தம்? இன்னொருவருடைய திறமையைப் பாராட்டி அவர் ஏதோ ஒன்றைக் கொடுத்தார் என அர்த்தம். நம்முடைய திறமையைப் பாராட்டி இன்னொருவர் நமக்கு ஏதாவது கொடுத்தால் அதுதான் பரிசு! ஆனால் இப்போது நடைமுறையில் அது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கு! அதனால்தான் நாமும் அதை அப்படியே சொல்ல ஆரம்பித்து விட்டோம்.

நியாயமான பரிசு என்பது எது? பரிசு பெறுபவருக்கு அதற்குரிய திறமை இருக்க வேண்டும். பரிசு வழங்குபவருக்கும் இந்த திறமையைப்பற்றி புரிந்திருக்க வேண்டும். இது எப்பவும் எல்லா இடத்திலேயும் சரியாக அமைவதில்லை. அதனால்தான் பிரச்சினை! ஒரு ராஜா இருந்தார். அவரது ஊரில் யாரோ ஒரு பெரிய வித் தைக்காரர் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டார். உடனே அவரை கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். அவனும் ராஜா கூப்பிட்டவுடனே புறப்பட்டு அரண்மனைக்கு வந்தான். உனக்கு என்னென்ன வித்தையெல்லாம் தெரியும்? என்று கேட்டார் ராஜா. மன்னா எனக்கு மந்திர வித்தையெல்லாம் தெரியாது. ஆனாலும் ஒருசில வேடிக்கையெல்லாம் செய்வேன் என்றான். அப்படி என்னென்ன தெரியும்? என்று கேட்டார் ராஜா. கயிறு மேல் நடப்பேன், நீளமாய் ஒரு மூங்கிலை நட்டு வைத்து அதன்மேல் தலை கீழாக ஏறி உச்சிக்குப் போவேன், அதன் நுனியில் வயிற்றை வைத்து சக்கரம் போல் சுற்றுவேன், சின்ன வளையத்திற்குள் புகுந்து வெளியே வருவேன், நான்கு காலிலே நான்கு கால்களால் மாடு மாதிரி நடப்பேன், மாடு மாதிரி கத்துவேன், ஒரே தடவையிலே ஒன்பது குட்டிக்கரணம் போடுவேன் என மிகவும் அடக்கமாகச் சொன்னான் அந்த வித்தைக்காரன். ராஜாவுக்கு மிகவும் சந்தோசம். உடனே சொன்னார்! அப்படியா! சரி வார வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு நீ இங்கே வா! எங்கள் அரண்மனைக்கு எதிரேயுள்ள மைதானத்தில் உன்னுடைய வித்தையைக்காட்டு. எங்கள் ஊர் மக்களும் அதைப்பார்த்து சந்தோசப்படட்டும் என்றார். சரி மகாராஜா எனச் சொல்லிவிட்டு அவன் போய்விட்டான். அடுத்த வெள் ளிக்கிழமை சரியாக நான்கு மணிக்கு வித்தை ஆரம்பமாகியது. ஒரு பெரிய சிம்மாசனத்திலே அமர்ந்து ராஜா வித்தையை பார்த் துக்கொண்டிருந்தார். பொதுமக்கள் பலர் சுற்றி உட்கார்ந்து வேடி க்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த வித்தைக்காரன் ஒவ் வொரு வித்தையாக செய்து காட்டிக் கொண்டிருந்தான். மாடு மாதிரி நடக்க ஆரம்பித்தான் ம்மா... ம்மான்னு மாடு மாதிரி கத்திக் கொண்டு சுத்தி சுத்தி வந்தான். அப்போது அந்த கூட்டத்தில் இருந்த மாடு மேய்கின்ற சின்னப்பையன் ஒருத்தன் ஒரு சின்னக் கல்லை எடுத்து அந்த வித்தைக்காரன் முதுகிலே போட்டான். அடுத்த விநாடியே சபாஷ் என்று சொல்லி பாராட்டவும் செய்தான். வித்தைக் காரனும் ஏன் என் முதுகிலே கல்லைப் போட்டாய் என கோபப்படவில்லை. அவனுக்கும் சந்தோசம்! வித்தையெல்லாம் முடிந்தது. எல்லோரும் கைதட்டினார்கள். ராஜா அவனை அருகே கூப்பிட் டார். ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அதற்குப்பிறகு அந்த மாடு மேய்க்கிற சின்னப்பையன் ஓடிவந்தான். தனது தோளில் கிடந்த ஒரு கிழிந்த கம்பளியை எடுத்து அந்த வித்தைக் காரனுக்கு பரிசாகக் கொடுத்தான். அந்த வித்தைக்காரன் ராஜா கொடுத்த முத்துமாலையை விட இந்தப் பையன் கொடுத்த கிழிந்த கம்பளியைத்தான் பெரிதாக நினைத்தான். அதைக் கண்ணிலே ஒற்றிவிட்டு அந்த மாடு மேய்க்கிறவன் காலைத்தொட்டுக் கும்பிட் டான். ராஜாவுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை! வித்தைக்காரன் விபரத்தைச் சொன்னான்... மகாராஜா! இந்த சின்னப்பையன் என்னுடைய திறமையை நல்லாப் புரிந்து வைத்தி ருக்கிறான். நான் மாடு மாதிரி நடித்த போது ஒரு சின்னக் கல்லை எடுத்து என் முதுகிலே போட்டான். மாட்டு உடம்பிலே ஏதாச்சும் பட்டவுடனே அது அந்த இடத்தை மட்டும் சுளிக்கும். இந்தப் பையன் கல்லைப்போட்டவுடன் நான் அது மாதிரியே கல்பட்ட இடத்தை மட்டும் சுளிச்சுக் காட்டினேன். அதைப் பார்த்துத்தான் சபாஷ் என்று சொன்னான். அதனால்தான் அவன் கொடுத்த கிழிந்த கம்பளமாக இருந்தாலும் என்னுடைய திறமையைப் புரிந்து கொண்டு கொடுத் ததனால் அது எனக்குப் பெரிதாகத் தெரிந்தது என்றான். ராஜா இதைக் கேட்டதும் உடனே கோபப்படவில்லை. அந்தச் சின்னப் பையனைக் கூப்பிட்டார். அவனுக்கும் ஒரு முத்துமாலையை பரிசாகக் கொடுத்தார். அர்த்தமுள்ள பாராட்டுப் பரிசு என்றால் அது இதுதான். பாராட்டிலே இன்னொரு வகை உண்டு. ஒரு பெரியவர் ஒரு விருந்துக்குப் போனாராம். சாப்பிடுவதற்கு முன்னரே ஆகா விருந்துச் சாப்பாடு என்ன ருசி! என்ன சுவை! ரொம்ப பிரமாதம்! இது மாதிரி என் வாழ்நாளிலேயே சாப்பிட்டதில்லை என்று பாராட்டினாராம். என்னங்க இன்னும் சாப்பிடவேயில்லை. அதற்குள் பாராட்டிவிட்டீர்கள்? என்று மற்றவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இவர் சாப்பிட்ட பிறகு பாராட்ட முடியுமோ இல்லையோ சொல்ல முடியாது. அதனால்தான் முன்னரே பாராட்டினேன்! என்று விளக்கம் கொடுத்தாராம்!

# இலங்கையில் அழிக்கப்படும் பெருங்கற்கால தமிழர்களின் தொல்லியல் ஆதாரங்கள்!






(அம்பாறை)

இலங்கையின் கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டத்தின் சங்கமன் கண்டி பிரதேசத்துக்கு அருகேயுள்ள காட்டுப் பகுதியில் காணப்படும், தமிழ் மொழியைப் பேசிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் ஆதாரங்கள் சூறையாடப்பட்டும், அழிவடைந்தும் வருகின்றமையால், அவற்றைப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென, அப்பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சங்கமன் கண்டி பிரதேசத்தின் பிரதான வீதியிலிருந்து மேற்குப் புறமாக சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில், ஏராளமான புராதன சின்னாங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில சின்னாங்கள் கிறிஸ்துவுக்கு முன்னர் இர்ண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும், சில சின்னாங்கள் கிறிஸ்துவுக்குப் பின்னர் எட்டாம் நூற்றாண்டை சேர்ந்தவை எனவும் அறியப்படுகின்றன.

வரலாற்றுத்துறை பேராசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தருமான எஸ். பத்மநாதன், இந்த தொல்லியல் சின்னாங்கள் மேற்குறிப்பிட்ட காலங்களுக்குரியவைதான் என்பதை, உறுதிப்படுத்தினார்.

மலைகளிலும் மலைகள் அருகே காணப்படுகின்ற இந்தப் புராதன சின்னங்கள், இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், அவற்றை பாதுகாப்பதற்கான போதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என, அந்தப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



குறித்த பகுதியில் அடிக்கடி சட்ட விரோதமாக புதையல் தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையால், அங்கு காணப்படும் பெறுமதிமிக்க புராதன சின்னங்கள் சேதமடைந்தும், அழிவடைந்தும் செல்கின்றன என்று, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கே. தர்மராஜ் தெரிவித்தார்.

இப்பகுதியில் கல்வெட்டுக்கள், நடுகல், கல்லறைகள், பாறைத் தூண்கள், மலைகளில் குடையப்பட்ட நேர்த்தியான குழிகள் மற்றும் நீர்த் தொட்டிகள் உள்ளிட்ட ஏராளமான புராதன சின்னங்களை இன்னும் காணக் கிடைக்கின்றன.

இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்படும் 'நடுகல்' இங்கு காணப்படுகின்றமையை பேராசியர் பத்மநாதன் உறுதிப்படுத்தியுள்ளதோடு, 'நடுகல்' என்பது, ஆதி இரும்புக்காலம் என்று சொல்லப்படுகின்ற -பெருங்கல் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகும் எனவும் தெரிவித்தார்.

பெருங்கற்கால மக்கள்தான் 'நாகர்'கள் என அழைக்கப்படுவதாகவும் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்தார்.

அந்தவகையில் 'நடுகல்' இங்கு காணப்படுகின்றமையை வைத்து, கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், தமிழ்மொழியைப் பேசிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் இங்கு பரவியிருந்தார்கள் என்பதை திடமாகக் கூறலாம் எனவும் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், அங்கே கிடைக்கப்பெற்ற பானையோடு ஒன்றில் தமிழ் பிராமி எழுத்து காணப்பட்டதாகவும், இதனை தென்னிந்திய ஆய்வாளர்களும் அக்காலத்தில் உறுதி செய்தனர்.

"ஈமத்தலங்களில் அமைக்கப்பட்ட நான்குக்கும் மேற்பட்ட கல்லறைகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. இவை நீள் சதுரமான வடிவுடையவையாகும். அந்த கல்லறையை நீளமான ஒரு கல்லினைக் கொண்டு மூடிவிடுவார்கள். அதனை தொப்பிக்கல் (**Dollmen**) என்று சொல்வார்கள். இந்த 'தொப்பிக்கல்'கள் இங்கு காணப்படுவதை வைத்தும், கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு தமிழ்மொழிபேசிய மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்த முடியும்" எனவும் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்திருந்தார்.

பெருங்கற்கால மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள் என்றும், அவர்கள் தான் தமிழ்மொழியை இலங்கைக்குக் கொண்டுவந்தனர் என்றும் கிடைக்கப்பெற்ற தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், கி.மு. 4 நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான், தமிழ் - எழுத்து வடிவம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், ஆதி இரும்புக்காலம் என்று சொல்லப்படுகின்ற - பெருங்கற்காலத்தில் தமிழ் பேசிய மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களும், தமிழ் பிராமி எழுத்துக்களும் கிடைக்கப்பெற்றுள்ள இடத்தையும், அங்கு காணப்படுகின்ற தொல்லியல் சின்னங்களையும் பாதுகாக்க வேண்டியமை அரசின் கடமையாகும்.

அநுராதபுரம் மற்றும் பொலநறுவை போன்ற இடங்களிலுள்ள தொல்லியல் சின்னங்களை அரசு பாதுகாத்து வருகின்றமை போல், சங்கமன் கண்டி பிரதேசத்திலுள்ள தொல்லியல் சின்னங்களையும் பாதுகாப்பதற்கான



நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-7)

# இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## பிரித்தானியாவிடம் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடந்து வருகின்றது. ஐ.நா கூட்டத்தொடரில் பிரித்தானியா தலைமையில் மீண்டும் இலங்கை தொடர்பான பிரேரணை கொண்டு வரப்படவுள்ள நிலையில் கடந்த 16 ஆம் திகதி பிரித்தானிய பிரதமர் வாசஸ்தலத்தில் (**10 Downing Street**) மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் மனிதவுரிமை செயற்பாட்டாளர்களான நுஜிதன் இராசேந்திரம், சுப்பிரமணியம் கேசவன், பொன்ராசா புவலோஜன் ஆகியோரினால் குறித்த மனுவானது கையளிக்கப்பட்டது. இந்த மனுவில் தமிழ் மக்கள் தற்போது எதிர்பார்க்கின்ற பிரதானமான முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது போர்க்குற்றங்களும், மனித நேயக் குற்றங்களும் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னைய அறிக்கைகள் அனைத்தும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்குக் கொண்டு வருவதற்கும், யுத்தம் முடிவுற்று 10 வருடங்கள் கடக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கான தீர்வை இதுவரையில் வழங்கத் தவறியுள்ளமையாலும், கடந்த கால வன்முறைகள் மீளெழுவதைத் தடுப்பதன் பொருட்டு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளமையாலும் ஓர் நிலையான அரசியல் தீர்வினைக் காண்பதை நோக்காகக் கொண்டும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்மானிப்பதன் பொருட்டும் இத்தீவின் வடக்கு- கிழக்குப் பிராந்தியத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கும் குறித்த மனுவினூடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றம் தொடர்பில் ஐ.நாவால் கொண்டு வரப்பட்ட 30/1 மற்றும் 34/1 தீர்மானங்களின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசிற்கு இரு வருட கால அவகாசங்கள் வழங்கியும் அவற்றை இலங்கை அரசு செயற்படுத்த தவறியுள்ள நிலையில் இம்முறை மீண்டுமொரு கால அவகாசத்தினை இலங்கைக்கு வழங்காது இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட 30/1, 34/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதையும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு- கிழக்கில் இராணுவத்தின் தொடர் பிரசன்னம், வடகிழக்கில் நடந்துவரும் தொடர்ச்சியான சிங்கள குடியேற்றங்களை நிறுத்துதல், இராணுவவசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், வேண்டும் போன்ற கோரிக்கைகளும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், இலங்கையின் விவகாரத்தை ஐ.நாவின் பாதுகாப்பு சபையிடம் பாரப்படுத்த வேண்டும் எனவும் குறித்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)


# நாவலருக்குப் பின் தமிழ்ப்பணி ஆற்றிய சதாவதானி கதிரவேற்பிள்ளை 112 ஆவது குருபூசை இன்று

மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை பெருமகனாரின் பெருமை சொல்லுந் தரமன்று. நாவலர் அவர்களுக்குப் பின்னர் தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றியவர்களில் சதாவதானியும் முக்கியபங்கினை வகித்தார். பெருமகனார் 1871 பிரசோற்பத்தி வருடம் 3 ஆம் திகதி இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்துள்ள மேலைப் புலோலியிலே நாகப்பிள்ளை-சிவகாமி தம்பதியரின் குழந்தையாக அவதரித்தார். ஆரம்பக் கல்வியினை சைவப் பிரகாச வித்தியாசாலையில் பெற்று ஆற்றல் மிக்கவராக விளங்கினார். கற்ற பாடசாலையிலே ஆசிரியராக கடமையாற்றினார்.

அக்காலத்திலே கலங்கரை விளக்கம் போலிருந்த கனகசுந்தரம்பிள்ளையிடம் கதிரவேற்பிள்ளை தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலான அருங்கலை நூல்களையும் வேறும் பல வித்துவான்களிடம் செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் வடமொழியையும் நுணுகி ஆராய்ந்து கற்றுப் புலமையெய்தினார்.

1897 ஆம் ஆண்டு முதலாக வேப்பேரி உயர்நிலைப் பள்ளியிலும் சென்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் ஆசிரியராக கடமையாற்றினார்.

கதிரவேற்பிள்ளையின் கற்பித்தல் முறை மாணவரை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் தமிழ் உலகம் போற்றும் வி.க.என்னும் கலியாண சுந்தரமுதலியாரும் சகோதரர் உலகநாத முதலியாரும் பிறரும் கதிரவேற்பிள்ளையின் மதிப்பிற்குரிய மாணவ சிரோன்மணிகளாயினர். பெருமகனாரின் ஆற்றல், அறிவு, புகழ் பற்றி வி.கலியாணசுந்தர முதலியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'முதன் முதல் எனக்கு கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியூர் நா.கதிரவேற்பிள்ளை. அவர்தம் பெரும் பொழுது சமயவாதங்களிலும் கண்டனங்கள் வரைவதி



லும் செலவாயிற்று. குறிப்பிட் நேரத்தில் மாணாக்கர் அவரிடத்தில் தமிழ் பயிலுதல் இயலவில்லை. ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் அவர் பாடம் சொல்வார். எவ்விடத்திலும் சொல்வார். அவரது வாதப் பேச்சுக்களிலும் தமிழ் மணம் கமழும் கலைமகள் நடம் புரிவாள், மாணக்கர் ஐயப்பாடுகள் பல நீங்கும். செந்தமிழ் அணங்கின் சிந்தனையில் என்றும் தங்கும் தமிழொளித் துங்கவன்'.

கதிரவேற்பிள்ளை தணிகைப் புராணமும் கந்தபுராணமும் ஒழுங்காகப் பிரசங்கம் செய்து வந்தகாலத்திலே மாயாவாதத்தை இவர் தாக்கி உண்மைச் சுத்தாந்தவித சைவசித்தாந்தத்தை நிலைநாட்டினார். இவருடைய சீரிய தொண்டைப் பாராட்டி சென்னையில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தலைமையில் 'மாயாவாததுவம் சகோளரி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சைவத் தமிழ் அன்பர்கள் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பேரவையைக் கூட்டி கதிரவேற்பிள்ளையைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து மேலும் பல விருதுகளும் பட்டங்களும் வழங்குவாராயினர். சைவசித்தாந்த மகாசரபம், அத்துவைத சித்தாந்தம் கோத்தனார், மகாவித்துவான், நாவலர், பெருங்சோற் கொண்டல் என்பன போன்ற பட்டங்கள் கதிரவேற்பிள்ளையின் பெயரை மொய்த்தன. ஆரணி சமாஸ்தான வித்துவானாய் இருந்த காலத்திலே தான் அவ்வாதீனத் தலைவரால் அத்துவித சித்தாந்தம கோத்தாரணர் பட்டத்தை நல்கினார் என்பர்.

சிவ சேத்திராலய மஹோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை, திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் வரலாறு முதலாக நூல்கள் அவருக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தன. இவற்றை விடப் பழனித் தலபுராணம், திருவருணைக் கலம்பகம், சிவராத்திரி புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தியுரை எழுதினார்.

இவர் அதிவீரராமபாண்டியன் இயற்றிய தமிழ் கூர்ம புராணத்துக்கும் அரியதோருரை எழுதியுள்ளார்.

புலவர்க்கு ஔதடம் எனப் போற்றப்படும் நைடத்துக்கு ஓர் ஆராட்சியுரை எழுதினார். தமிழ் நாட்டு சைவ மடங்களாலும் குறுநில மன்னரவையினாலும் புரவலராலும் போற்றப் பெற்ற கதிரவேற்பிள்ளை சதாவதானம் செய்யப்போகிறாராம் என்னும் செய்தி சென்னையில் பரவியது.

வித்துவான்கள், கவிராயர்கள், பண்டிதர்கள், பிரபுக்கள், மடத்து தம்பிரான் சுவாமிகள் அறிவிற் சிறந்தாரெல்லாரும் நிறைந்த மண்டபத்தில் 1907 ஆம் ஆண்டில் சதாவதானமும் செய்து சதாவதானம் கதிரவேற்பிள்ளை எனப் பெயர்பெற்றார்.

கதிரவேற்பிள்ளை செய்தபெரியகராதியைகாஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பித்தார். அதுவே வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது.

தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் அரும்பெரும் பணிகள் ஆற்றிய பெருமகனார் 1907 பராபலவருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மக நட்சத்திரம் கூடிய துவாதசித் திதியிலே அகண்டா கரம் பொருளாஞ் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

அ.துரைசிங்கம்

# தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த மூவர் மறியலில்

(பதுளை)

ஊவா மாகாண சபையில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி இலட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்த மூவரை பதுளை நீதவரன் நீதிமன்ற நீதிபதி சமிந்த கருணாதாச விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஊவா மாகாண சபையில் சாரதிகளாக உள்ள இருவரும் சபையின் பாதுகாப்புக் கடமையிலிருந்து வரும் ஒருவருமாக மூவர் பதுளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இம் மூவர் விசாரணையின் பின்னர் நேற்று பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஊவா மாகாண சபையில் மூவருக்கு தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி அவர்களிடம் மூன்று இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்தமையால் பாதிக்கப்பட்ட மூவரும் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து குறிப்பிட்ட மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பல்கலை.மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளருக்குப் பிணை



பாராளுமன்ற சுற்று வட்டத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது அமைதியற்ற முறையில் செயற்பட்டதன் காரணமாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மகில் பண்டார தெஹிதெனிய பொலிஸாரால் கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்ப ட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளரை நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று ஒருங்கிணைப்பாளரை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (இ-7)

# பொலிஸ் உயரதிகாரிகள் 26 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 26 பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சேவை நிமித்தத்தின் கீழ் பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதற்கமைய, பொலிஸ் அதிகாரிகள் ஐவர், உதவி பொலிஸ் அதிகா ரிகள் 14 பேர், பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மூவர், பொலிஸ் பரிசோதகர்கள் இருவர் என 26 உயரதிகாரிகளுக்கே இந்த மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 180 | 160 | 200 |
| தக்காளி | 60 | 60 | 40 | 35 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 120 | 110 | 60 |
| கோவா | 60 | 40 | 60 | 55 | 60 |
| கரட் | 80 | 80 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 35 | 40 |
| புடோல் | 80 | 60 | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 120 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | — | 70 | 80 |
| பயற்றங்காய் | 140 | 200 | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100. | 80 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 550 | 600 | 400 | 350 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 50 | 100 |
| கீரை-1பிடி | 40 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 70 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 90 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 100 | 80 |

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்மொழியப்பட்டபோது பா.ஜ.க.வேடிக்கை பார்த்தது ஏன்?

## சீமான் ஆவேசம்



(சென்னை)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்று முன்மொழியப்பட்டபோது, பா.ஜ.க. வேடிக்கை பார்த்ததாகவும் இனப்படுகொலையைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், சிங்களவர் இராமனின் வம்சாவளியினர் எனவும் தமிழர்கள் இராவணனின் வம்சாவளியினர் எனவும் கூறி நாம் இராமனின் வம்சாவளியினருக்கு துணைநிற்க வேண்டும் என பா.ஜ.க. கூறிய பதிவுகள் காணப்படுகின்றன.

2ஜி. ஊழலுக்கு எதிராக ஒரு மாதமும் முப்பது நாட்களும் நாடாளுமன்றத்தை முடக்கிய வலிமையான எதிர்க்கட்சி இலங்கைத் தமிழரின் இனப்படுகொலை தொடர்பாக ஏன் போராடவில்லை எனவும் சீமான் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




"பெரும்பாலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிழக்கு மற்றும் சிங்கள மாகாணங்களிலும் நிகழ்ந்தன. 1860களிலிருந்தே மட்டக்களப்பு மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசன வேலைகளும் நாட்டின் ஏனைய பாகங்களில் சிறிய நீர்ப்பாசன வேலைகளும் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்த முயற்சிகள் உண்மையில் கிறெகொரியின் நிர்வாகத்தின் கீழே தான் வேகம் பெற்றன"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

1895இல் இறக்குமதி செய்யப்பட்ட அளவு விலை ரீதியில் 282,006 ரூபா பெறுமதியான 7369 அந்தர்களாகும். 1894 இல் 259, 899 ரூபா பெறுமதியான 4,829 அந்தர்கள் இறக்குமதி செய்யப்பட்டது. 3 இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலை வருடாந்தம் யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது என்பது இதனால் தெரிகிறது.

யாழ்ப்பாணம் சுருட்டுக்கள் என அழைக்கப்படும் உற்பத்திப் பொருளை ஆக்குவதற்கு இது மூலப்பொருளாகப் பயன்படுகின்றது. இவை மேற்கு, மத்திய, தென் மாகாணங்களிலும் திருவாங்கூரிலும் கொச்சினிலும் நுகரப்படுகின்றன.

புகையிலை உற்பத்தி அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு சுருட்டு உற்பத்தி யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்குச் செல்வத்தைக் கொண்டு வந்தது.

அரசாங்கத்தின் வடக்கு நிர்வாக அறிக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் அளவு காணப்படுகின்றது. இது பின்வருமாறு இந்து ஓகன் பத்திரிகையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

திருவாங்கூருக்கு 1894 இல் ரூபா 1,225,393 பெறுமதியான 34,850 அந்தர்கள் ஏற்றுமதி செய்யப்பட 1895 இல் ரூபா 1,196,976 பெறுமதியான 53,241 அந்தர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. குடியேற்ற நாட்டின் ஏனைய பாகங்களுக்குக் கரையோரமாக 37,000 அந்தர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

தமிழரின் இரண்டாவது பிரதானமான விவசாய உற்பத்திப் பொருள் நெல்லாகும். ஆயினும் பருவப்பெயர்ச்சி மழை அடிக்கடி பொய்த்தனால் நெல்லினால் கிடைக்கும் வருமானம் நிலையற்றதாக இருந்தது.

குளங்கள், நதிகள் போன்ற நீர்வளங்கள் இல்லாமையால் யாழ்ப்பாணத் தமிழர் இடர்களுக்கு ஆளாகினர். குளங்களிலிருந்தும் நதிகளிலிருந்தும் போதியளவு நீர் கிடைத்தமையால் வன்னி, கிழக்கு மாகாண நிலைமை வேறுபட்டிருந்தது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் பார்க்க இங்கு நெற் செய்கை நிலைபெற்றிருந்தது. பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் நெற்செய்கையை அசட்டை செய்ததுடன் இந்தியாவிலிருந்து மலிவான அரிசியை இறக்குமதி செய்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் தங்கியிருக்காத தமிழர் தொடர்ந்து நெற்செய்கையில் ஈடுபட்டனர்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசாதிபதி வில்லியம் கிறகொரியின் (1872) கீழான பிரித்தானிய குடியேற்ற அரசாங்கம் நீர்ப்பாசன முறைமையை புனருத்தாரணம் செய்ய முன் வந்து புதிய நிர்மாண வேலைகளை மேற்கொண்டது.

இதன்காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிழக்கு மாகாணத்திலும் நெற்செய்கை அதிகரித்தது. 1864 இலான பின்வரும் புள்ளிவிபரம் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அளவை நீர்வளம் உள்ள கிழக்கு மாகாணம், சிங்கள மாகாணங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அளவுடன் ஒப்பீடு செய்கின்றது.

| நெல் உற்பத்தி | |
|---|---|
| மாகாணம் | அளவு (புசல்களில்) |
| மேற்கு | 105,66 |
| வடமேற்கு | 444,217 |
| தெற்கு | 820,750 |
| வடக்கு | 856,182 |
| கிழக்கு | 881,855 |

தேசாதிபதி கிறெகொரியின் நீர்ப்பாசனச் சீர்திருத்தங்களினால் நெல் உற்பத்தி அதிகரித்து புராதனமான சிதைந்த நிலையிலுள்ள குளங்களை மீள அமைப்பதே கிறகொரியின் முதல் வேலையாக இருந்தது. பின்னர் பாரிய புதிய குளங்கள் அமைக்கப்பட்டன.

இவ் வேலைகள் பெரும்பாலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிழக்கு மற்றும் சிங்கள மாகாணங்களிலும் நிகழ்ந்தன. 1860களிலிருந்தே மட்டக்களப்பு மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசன வேலைகளும் நாட்டின் ஏனைய பாகங்களில் சிறிய நீர்ப்பாசன வேலைகளும் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்த முயற்சிகள் உண்மையில் கிறெகொரியின் நிர்வாகத்தின் கீழே தான் வேகம் பெற்றன.

பல நூற்றாண்டுகளாக வட மத்திய, மத்திய, கிழக்கு மாகாணங்களில் சிதைந்த நிலையிலிருந்த பெரிய குளங்கள் மீளமைக்கப்பட்டு முன்பு ஆரம்பிக்கப்பட்டிருந்த வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

1872 இல் கிழக்கு மாவட்டத்தில் திவுலானக் குளம் (அம்பாறை), சாகமம் குளம் (பொத்துவில்) என்பன கட்டி முடிக்கப்பட்டு முறையே 1647, 2738 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டது. 1891 இல் இறக்காமக்குளம் (பொத்துவில்) கட்டி முடிக்கப்பட்டது.

1870 இல் றுகம்குளம் (மட்டக் களப்பு), 1885 இல் கட்டுக்கருணைக்குளம் (பாண்டிருப்பு), புலுகநாவகுளம். (பாண்டிருப்பு) என்பனவும் பூர்த்தியாக்கப்பட்டு முறையே 8162, 2744, 4222 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.

மேலும் 1908 இல் வாகனேரிக்குளம் (கல்குடா), 1919 இல் உன்னிச்சைக்குளம் (மட்டக் களப்பு) என்பனவும் பூர்த்தியாக்கப்பட்டு முறையே 7680, 9247 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.

(தொடரும்)

# காப்பெற் வீதி கோரி பாரிய ஆர்ப்பாட்டம்



(நாவலப்பிட்டி)

பூண்டுலோயா - நாவலப்பிட்டி பிரதான வீதியில் கலப்பிட்டிய சந்தியிலிருந்து ஹறாங்கல சந்தி வரையுள்ள சுமார் 9 கிலோ மீற்றர் பிரதான வீதியை சீரமைத்து தரக் கோரி நேற்றுக்காலை வீர சேகரபுர பகுதியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பூண்டுலோயா - நாவலப்பிட்டி பிரதான வீதியை மறித்து அப்பகுதியை சேர்ந்த சுமார் 500 ற்கும் மேற்பட்டவர்கள் கலப்பிட்டிய வீர சேகரபுர பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அவ் வீதியினூடான போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

பிரதான வீதியில் டயர்களை எரித்து, கோஷங்களை எழுப்பி, பதாகைகளை ஏந்தியவண்ணம் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மதகுருமார்களும் கலந்து கொண்டனர்.

கலப்பிட்டிய சந்தியிலிருந்து ஹறாங்கல சந்தி வரையுள்ள சுமார் 9 கிலோ மீற்றர் பிரதான வீதியை காப்பெற் இட்டு செப்பனிட்டு தருமாறு பலமுறை அரசியல்வாதிகளிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் தெரிவித்தும் இதுவரை எவ்வித தீர்வு கொடுக்கவில்லை என தெரிவித்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

# 4 ஆண்டு இழுபறிக்குப் பின்னர் இலங்கைக்கு சீன வங்கி நிதியுதவி

(கொழும்பு)

நான்கு ஆண்டுகள்நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதற்கட்டத்துக்கு, ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்க சீனாவின் எக்.சி.எம் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

சீனாவில் கடந்த வாரம், திறைசேரியின் வெளியக வளங்கள் திணைக்கள அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களை அடுத்து, சீன வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில், புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஐ.தே.க. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கடுவத்த தொடக்கம் மிரிகம வரையான 37 கிலோ மீற்றர் பகுதிக்காக அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு 2015ஆம் ஆண்டு சீனாவின் வங்கியுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் இலங்கையின் நிதி நிலைமை, அரசியல் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கான நிதிகள் தொடர்பான மோசமான அறிக்கைகளால், இந்தக் கடனுக்கு அனுமதி அளிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது என்று திறைசேரியின் வெளியக வளங்கள் திணைக்கள பணிப்பாளர் ரத்நாயக்க தெரிவித்தார். (இ-7)

# தனியார் துறையினருக்கு சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி பிரேரணை

(கொழும்பு)

தனியார் துறையினருக்கு 2,500ரூபாசம்பள அதிகரிப்பை வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரும் முன்னாள் தொழில் அமைச்சருமான காமினி லொக்குகே நேற்று பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இந்த வருடத்துக்கான வரவு- செலவு திட்டத்தின் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற மற்றும் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த பிரேரணையை முன்வைத்தார்.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு மேற்கொண்டுள்ளதாக மார்தட்டும் அரசாங்கம் வரவு- செலவு திட்டத்தில் தனியார் துறைக்கு எந்த சலுகையையும் வழங்கவில்லை.

அத்துடன் தொழில் அமைச்சு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சாக இருப்பதால் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1674


## அர்ஜுன்

உறவு என்று சொல்லிக்க ஆயிரம் பேர் இருக்கலாம்... ஆனால் உணர்வைப் புரிந்துகொள்ள ஒருத்தராவது இருக்கனும். அப்போதுதான் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கும்



## ஜானகி

தள்ளாடும் வயது வரும் முன்பு தனக்கென சேர்த்துக்கொள்... தனித்துவிட்டாலும் தளராமல் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழலாம்



## விஜயா

நாம் இன்று என்ன நிலையில் இருக்கிறோமோ அந்நிலையை நமக்கு அளித்தது நமது எண்ணங்கள் தான். நமது இன்றைய நிலை எமது எண்ணங்களாலேயே ஆக்கப்படுகிறது




## பிரஜின்

கீழான குணமுடைய மனிதன் பணத்தை விரும்புகின்றான்... நடுத்தர மனிதன் பணத்தையும் மரியாதையையும் விரும்புகிறான்... மேன்மைக்குணமுடைய மனிதன் மரியாதையை மட்டும் விரும்புகிறான்- சாணக்கியர்



## பவானி

உன் மனம் வலிக்கும் போது சிரி... பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை



## ரகு

அடேய் லகுடபாண்டிகளா ஆண்கள் தினம் என்றால் ஒருவன் வாழ்த்துவது கிடையாது பெண்கள் தினம் என்றால் மட்டும் மளமளவென்று வாழ்த்து மழை பொழிவது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



காணி நிர்ணயம் இலங்கை முழுவதும் முழு அளவில் முற்றுப் பெறாததால் அரச காணியை தனியார் காணியென்றும் தனியார் காணியை அரச காணியென்றும் மற்றும் ஒருகாணிக்கு பல உரிமை கோரல்கள் என்றும் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இப்பிரச்சினைகள் நீதிமன்றத்தை நாடுவதன் மூலமே தீர்த்துக்கொள்ள முடியும்.

இதுபற்றி கட்டளைச் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. காணி நிர்ணயத்தின் போது உரிமை கோரலில் ஏதும் பிரச்சினைகள் இருப்பின் அவ்வாறான காணிகளுக்கான உரிமை கோரல் விண்ணப்பங்களைச் சேர்த்து தனியொரு விசாரணையாக நடத்த முடியும். சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் உரிமை கோரலை மாவட்ட நீதவானிடம் சமர்ப்பிக்கையில் காணி நிர்ணய உத்தியோகத்தரால் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட வேறேதும் உரிமை கோரலையும் உள்ளடக்குதல் சட்டரீதியானது. எனினும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உரிமைகோரல்கள் நிர்ணய உத்தியோகத்தரால் ஒரே சமர்ப்பிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ்வுரிமைகோரல் குறித்து இலகுவாய் ஒருங்கிணைத்து செயற்பட முடியாதென மாவட்ட நீதவான் நினைத்தால், அவ்வுரிமை கோரல்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கமுன், எந்தவொரு வேளையிலும், அவ்வுரிமை கோரல்களில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவை குறித்த வெவ்வேறாக செயற்பட வேண்டுமென அவரால் கட்டளையிட முடியும்.

சமர்ப்பிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த வேறெந்த விடயச் சமர்ப்பிப்பு தொடர்பிலும் விசாரணையின்போது தீர்மானிக்கப்படல் கூடாது. அத்தோடு அரசுக்கும், சமர்ப்பிப்பில் குறிப்பிடப்படாத வேறு தரப்பினருக்குமிடையிலான ஏதும் பிரச்சினை குறித்து விசாரிக்கவோ, தீர்மானிக்கவோ கூடாது.

**➢வழக்குக் கேட்டல் நடைமுறை**

உரிமைகோரல் குறித்த விசாரணைக்குக் குறிக்கப்பட்ட திகதியில் அல்லது விசாரணை ஒத்திவைக்கப்பட்ட ஏதும் திகதியில் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியாளர்களிடம் கேள்விகேட்டல் மாவட்ட நீதவானால் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு வழக்கு விசாரித்தும், தரப்பினரால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களைப் பரீட்சித்தும், தேவைப்படின் மேலதிக விசாரணையின் பின்னரும் மாவட்ட நீதவானினால் உரிமை கோரலைத் தள்ளுபடி செய்யக் கட்டளையிட வேண்டும் அல்லது உரிமை கோரப்பட்டுள்ளது ஏதும் காணி அல்லது காணியின் பகுதி அல்லது அதன் சார்பானது தொடர்பிலானால் சந்தர்ப்பத்திற்கு அமைய அது முழுமையாக அல்லது அதன் ஏதும் பகுதி அரசுக்கெதிராக உரிமைகோருபவருக்கு உரிமையானதென மாவட்ட நீதவானால் கட்டளை ஒன்றின் மூலம் பிரகடனப்படுத்துதல் வேண்டும். அத்துடன் நடவடிக்கைச் செலவு தொடர்பிலும் அவர் தன் எண்ணப்படி கட்டளையிடல் வேண்டும்.

புதிய காணி அளவையொன்றை மேற்கொள்ளுமாறு மாவட்ட நீதவானால் கட்டளையொன்றைப் பிறப்பிக்க முடியும். இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதும் விடயம் தொடர்பிலான விசாரணையின் போது புதிய காணி அளவையொன்றை மேற்கொள்வது அவசியமெனக் கருதப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அவ்வாறான அளவையை நடத்துமாறு மாவட்ட நீதவானால் கட்டளையொன்றைப் பிறப்பிக்க முடியும்.

**➢ மேன்முறையீடு செய்தல்**

மாவட்ட நீதவான் ஒருவரது தீர்மானம் குறித்து அதிருப்தியடையும் உரிமை கோரல் சமர்ப்பித்த எந்தவொரு தரப்பினரும், அத்தீர்மானம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எழுதப்பட்ட மேன்முறையீட்டு மனுவொன்றை மாவட்ட நீதவான் ஒருவருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அத்தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அத்தகு மேன்முறையீட்டு மனு ஒன்று மாவட்ட நீதவான் ஒருவருக்கு கிடைத்ததும் அவரால் அது கோரிக்கை தொடர்பான விசாரணை அறிக்கை மற்றும் நடவடிக்கைக் குறிப்புகளுடன் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும். அத்துடன் அம் மேன்முறையீட்டுக்கு ஏனைய சகல மேன்முறையீடுகளைவிட முன்னுரிமை வழங்கவேண்டும்.

மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் சமனான மேன்முறையீடுகளுக்கு முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அத்தகைய சகல மேன்முறையீட்டு மனு தொடர்பிலும், பின்னர் நடத்தப்படும் நீதி நடவடிக்கைகளின் போதும், மாவட்ட நீதிமன்றத்துக்கு எதிரான மேன்முறையீட்டு மனு தொடர்பிலும் முத்திரைக்கட்டணம் அறவிடல் வேண்டும்.

மாவட்ட நீதிமன்றத்துக்கு எதிரான மேன்முறையீட்டு மனுக்கள் கையாளப்படும் விதத்திலேயே, அத்தகு சகல மேன்முறையீட்டு மனுக்களும் கையாளப்படல் வேண்டும். அத்துடன் அது குறித்த தீர்மானம் வழங்கப்பட்டபின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அவ்வுரிமை கோரலைத் தள்ளுபடி செய்து கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும். அல்லது சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் மாவட்ட நீதவானால் ஏதேனும் பிரகடனம் செய்யப்படல் வேண்டும்.

**➢காணிகள் தொடர்பில் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய விசேடமான விடயங்கள்.**

எந்தவொரு காணியையும் முதல் முறையாகப் பதிவு செய்கின்றபோது அரசாங்கப் பத்திரமொன்றை (காணிப் பதிவுக் காரியாலயத்தில் பதியப்பட்ட உறுதி) அடிப்படையாகக் கொண்டு பதிய வேண்டும். காணி கொடுக்கல்-வாங்கல் பத்திரங்களில் கட்டாயமாக முந்திய பதிவு விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். காணி தொடர்பான எந்தவொரு பத்திரத்திலும் திட்டவட்டமான எல்லைகள் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். காணியொன்றின் பரப்பளவு அளவீட்டுத் திட்டமொன்றின் (பரப்பு, ஏக்கர் போன்ற) மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

10.0 காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் - 1935இன் இல. 19 (சட்டத் திருத்தம் - 1945இல் இல.3, 1953இல் இல.49 1955இல் இல.22, 1969இல் இல.16, 1971 இல் இல.21,1973இல் இல.43, 1981இல் இல.27, 1983இல் இல.10, 1993இல் இல.22, 1995இல் இல. 9, 1996இல் இல.20) **(Land Development Ordinance)**

பலதரப்பட்ட சமூகங்கள் ஊடாக அரச காணிகளை அபிவிருத்தி செய்தல், விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்ளல் போன்ற நோக்கங்களுக்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் 1935ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கட்டளைச் சட்டத்தின்படி அரசாங்கத்தின் காணிகளை நிர்வகித்தல்,பாதுகாத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பொறுப்புகள் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது.

இத்திணைக்களம் அரச காணிகளை அரச அதிபர் மூலம் பாரிய விவசாயக் குடியேற்றங்கள், உயர்நிலத் திட்டங்கள், கிராமிய விரிவாக்கல் திட்டங்கள் போன்றவற்றிக்கு பகிர்ந்தளித்தது. இச்சட்டத்தின் கீழேயே கல்லோயா, மின்னேரியா போன்ற இடங்களில் உலர் வலயக் குடியேற்றங்கள் பாரிய அளவில் நடைபெற்றன. காலஞ்சென்ற டி.எஸ் சேனநாயக்க இச்சட்டத்தை அமுலாக்குவதில் முன்னோடியாகச் செயற்பட்டார். விவசாயக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் நெற்காணியும் 3 ஏக்கர் மேட்டு நிலக் காணியும் பகிர்ந்தளிக்கப்பட்டபோதிலும் காலப்போக்கில் காணிகளின் பற்றாக்குறை காரணமாக இத்தொகை 2 ஏக்கர் நெற்காணிகளாகவும் 1/2 ஏக்கர் மேட்டு நிலக்காணிகளாகவும் குறைக்கப்பட்டது.

> **இலங்கையிலுள்ள அரசாங்கக் காணிகளின் கிரமமான அபிவிருத்தி மற்றும் அவற்றை முறைப்படி பகிர்ந்தளித்தல் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வது காணி அபிவிருத்திக்கட்டளைச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.**

இவ்வாறு அனுமதிப்பத்திரம் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் அபிவிருத்தி நடைபெற்றதும், அவ்விவசாயிக்கு அவற்றுக்கான காணி அளிப்பு பத்திரம் கையளிப்பதற்கு சட்ட மூலத்தின்படி நில அளவைப்படம் தேவைப்படுகின்றது. அந் நிலஅளவைப் படங்கள் நிலஅளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட தொகுதிப் படங்களிலிருந்து காணி அளிப்பு பத்திரங்களுடன் இணைப்பதற்காக ஒவ்வொரு காணித்துண்டுக்கும் தனித்தனி வரைபடம் தயாரிக்கப்படுகின்றன.

அனுமதிப்பத்திரம் உள்ளவரின் வாரிசு இல்லாதவிடத்து காணியை திரும்பப் பெறல், கொடையை இரத்துச் செய்தல், அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் என்பனவும் இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

> **காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் "LDO permits" என அழைக்கப்படுகின்றன.**
>
> **காணியைப் பெறுவோர் பொதுவாக காணிக் கச்சேரி மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள்.**

**➢ "LDO permits" வழங்கல்**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் **"LDO permits"** என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒரு காணிக்கு வழங்கப்படும் **"LDO permits"** கள் பொதுவாக காணியில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும் அல்லது அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படவே வழங்கப்படுகின்றன **(section-19).**

காணியைப் பெறுவோர் பொதுவாக காணிக் கச்சேரி மூலமே தெரிவுசெய்யப்படுகிறார்கள். அவ் **"LDO permits"**I ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி புதுப்பித்தல் வேண்டும்.

பிரதேசச் செயலாளர் அவ் **"LDO permits"** I புதுப்பித்தல் செய்வதா அல்லது அதற்குப் பதிலாக காணி அளிப்புப் பத்திரம் **(grant)** வழங்குவதா என்பதைத் தீர்மானிப்பார்.

**(தொடரும்...)**

# சிறுவர் அரங்கம்

## தகுதிக்குத் தகுந்த வேலை!



மந்தாரபுரி என்ற இராச்சியத்தில் சற்குரு என்ற பண்டிதர் இருந்தார். அறிவில் சிறந்த மேதையாகக் கருதப்பட்ட அவரது குருகுலத்தில், பல மாணவர்கள் பயின்று வந்தனர். அந்த நாட்டு மன்னரும் அவரிடம் மிகவும் மதிப்பு வைத்து, அவரைத் தன் ராஜ குருவாகக் கருதி வந்தான். தன்னிடம் பயிலும் மாணவர்களின் படிப்பு முடிந்ததும், அவர்களது தகுதியைப் பொறுத்து அவர்களுக்குத் தகுந்த வேலைகளை அவர் சிபாரிசு செய்வதுண்டு.

மிகச் சிறப்பாகப் பயிலும் மாணவர்களை, அவர் தன்னுடைய சிபாரிசுடன் மன்னரிடம் அனுப்புவதுண்டு. அந்த மாணவர்களுக்கு மன்னரிடமே பொறுப்புள்ள நல்ல வேலைகள் கிடைத்துவிடும். ஒருமுறை, இவ்வாறு நன்றாகப் பயின்ற ஐந்து மாணவர்களைத் தேர்வு செய்து மன்னரிடம் அனுப்பினார் ராஜகுரு. அப்போது அந்த மாணவர்களில் நால்வரிடம் முறையே, மரத்தாலான செருப்பு, கைப்பிரம்பு, சல்லடை, துடைப்பம் கொடுத்து அனுப்பினார். ஐந்தாவது மாணவனை, மழுங்க மொட்டை அடித்து அனுப்பினார்.

அந்த ஐவரும் மன்னரது சபையை அடைந்தனர். மன்னர் அப்போது பக்கத்து நாட்டு அரசரின் அழைப்பின் பேரில் சென்றிருந்ததால், நிர்வாகப் பொறுப்பு இளவரசனிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அரியணையில் அமர்ந்திருந்த இளவரசனுக்கு வணக்கம் தெரிவித்தபின், தங்களை ராஜகுரு, மன்னரிடம் பணிபுரிய அனுப்பியுள்ளதாகக் கூறினர். ராஜகுரு மிகச் சிறப்பான மாணவர்களை மட்டுமே அனுப்புவார் என்று அறிந்திருந்த இளவரசனுக்கு, அவர்கள் கொண்டு வந்த பொருட்களைக் கண்டு குழப்பம் உண்டாகியது. அவர்களில் ஒவ்வொருவரும் எத்தகைய அரசுப் பணிக்குத் தகுதியானவர்கள் என்பதை உணர்த்தும் சங்கேதக் குறிப்புகளே அவர்களுடன் இருந்த பொருட்கள் என்று ஊகித்தாலும் அதை முழுமையாக இளவரசனால் அறிய இயலவில்லை. ஆகவே, அந்தப் பொறுப்பைத் தன் முதலமைச்சரிடம் ஒப்படைத்தான் இளவரசன்.

முதலமைச்சரும் அவர்களைத் தனித்தனியே பல கேள்விகள் கேட்டு, அவர்களுடைய தகுதிகளை ஒருவாறு அறிந்து கொண்டார். பின்பு அவர்கள் கொண்டு வந்த பொருட்களின் சங்கேதக் குறிப்பின்படி, மரத்திலான செருப்புகள் கொண்டு வந்தவனை, அரண்மனைப் பொருளாளர் பதவியில் அமர்த்தினார்.

பிரம்பு கொண்டு வந்தவனை கல்வித்துறை அதிகாரி ஆக்கினார். சல்லடை கொண்டு வந்தவனை காவல்துறை அதிகாரியாக நியமித்தனர். துடைப்பம் கொண்டு வந்தவனை சேனாதிபதி ஆக்கினார். தலையை மொட்டை அடித்துக் கொண்டு வந்தவனை துணை அமைச்சர் ஆக்கினார்.

முதலமைச்சரிடமிருந்து அவர்களது நியமனாங்களைக் கேட்டறிந்த இளவரசனுக்கு, அவர் எந்த அடிப்படையில் இவ்வாறு தேர்வு செய்தார் என்பது விளங்கவில்லை. ஆகவே, அவன் அதைப்பற்றி விளக்கம் கேட்டான்.

முதலமைச்சரும் புன்னகை புரிந்துகொண்டே, "இளவரசே கேளுங்கள்! மரச் செருப்புகள் நமது பாரத்தை சுமந்து நம்மை வழி நடத்துகின்றன. அதைக் கொண்டு வருபவன் மிகப் பொறுப்புள்ள வேலையைத் திறம்படச் செய்து நாட்டை வழி நடத்தக் கூடியவன் என்று பொருள். ஆகவே, அவனைப் பொருளாளர் ஆக்கினேன்.

"பிரம்பு பொதுவாக ஆசிரியர்கள் கையில் காணப்படுவது. ஆகவே, பிரம்பு கொண்டு வந்தவனைக் கல்வித்துறை அதிகாரி ஆக்கினேன். மூன்றாமவன் கொண்டு வந்தது சல்லடை. சல்லடை, பயனுள்ள நல்ல பொருட்களை அனுமதித்து, பயனற்ற பொருட்களைப் பிரித்து எடுக்கிறது. நல்லவர்களுக்கு மதிப்பு அளிப்பதும் அவர்களைக் காப்பதும் தீயவர்களைக் கண்டு பிடிப்பதும் அவர்களை தண்டிப்பதும் ஒரு காவல்துறை அதிகாரியின் பணியாகும்.

"ஆகவே, சல்லடை கொண்டு வந்தவனை காவல் துறையில் அமர்த்தினேன். அடுத்தது, நமது வீட்டுக்குள் அத்துமீறி நுழையும் தூசி, குப்பை ஆகியவற்றை அப்புறப்படுத்துவது துடைப்பத்தின் வேலை. நமது இராச்சியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் எதிரிகளை போர் செய்து வெளியேற்றுவதையே துடைப்பம் குறிக்கிறது. ஆகவே, துடைப்பம் கொண்டு வந்தவனை படைத் தலைவன் ஆக்கினேன்!" என்றார்.

"அமைச்சரே! இதுவரை நீங்கள் கூறியது சரி. ஆனால், கடைசியாக மொட்டை அடித்துக் கொண்டு வந்த மாணவனை ஏன் துணை அமைச்சர் ஆக்கினீர்கள்?" என்று இளவரசன் கேட்டான்.

"எனக்கும் முதலில் அது புரியவில்லை. வெகுவாக யோசித்த பின்னரே புரிந்தது. மனிதனுடைய தலைமுடியின் கீழே என்ன உள்ளது? அவனுடைய மூளை. அந்த மாணவனுக்கு மூளையின் திறன் அதிகம் என்று உணர்த்தவே அவன் முடியைக் களைந்து அனுப்பினார் என்று புரிந்தது. ஆகவே, அவனை துணை அமைச்சர் ஆக்கினேன்," என்றார் முதலமைச்சர்.

முதலமைச்சரின் விளக்கங்களைக் கேட்டபின், இளவரசனுடைய சந்தேகம் முற்றிலும் தீர்ந்தது.

அவருடைய புத்திக்கூர்மையை இளவரசன் மனமாரப் பாராட்டினான்.

## பொது அறிவும் விடைகளும்

- உலகின் மிகப்பெரிய தீவு எது?

**கிரீன்லாந்து**

- 2008 இல், தமிழக அரசின் சிறந்த திரைப்பட விருது பெற்ற படம் ?

**தசாவதாரம்**

- எது பாலைவனம் இல்லாத கண்டம்?

**ஐரோப்பா**

- 1966 இல், ஐ.நாவில் பாட அனுமதி பெற்ற முதல் பாடகி யார் ?

**எம். எஸ். சுப்புலட்சுமி**

- எதியோப்பியாவின் தலைநகரம் 'அடிஸ் அபாபா' வின் பொருள் என்ன?

**புதிய மலர்**

- உலகின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு எங்கே மேற்கொள்ளப்பட்டது?

**பாபிலோன்**

- ஐரோப்பா-ஆசியா இரு கண்டங்களில் அமைந்த நகரம் எது ?

**லூதுவேனியா**

- உலகின் முதல் பெண் பிரதமர்?

**திருமதி. பண்டாரநாயக்க**

## உலகின் மிகச்சிறந்த 10 சிறுவர் பொழுதுபோக்குகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

### சமைத்தல்



பெற்றோருடன் சேர்ந்து சமையல் செய்தல் ஒரு புதிய வினைத்திறனாகக் கொள்ளப் படுகின்றது

இச்செயற்பாட்டின் போது அவர்கள் தனித்துவம், சுத்தம், வினைத்திறன், மருத்துவகுணம், பொறுமை, நிதானம், பங்கிடல் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதோடு மிகவும் சிறந்த உணவுப் பழக்கவழக்கத்தையும் கற்றுக்கொள்கின்றனர். அத்துடன் உணவு வகைகள், சத்துக்கள் என்பன அதிகளவில் அவர்களின் நினைவில் கொள்ளப்படும்.

### கைவேலைகள்



கழிவுப்பொருட்களை மீள் சுழற்சிக்கு புதிய முறைக்கு கண்டு பிடித்து உற்பத்தி செய்வதன் மூலம் உச்ச பயன்பாட்டை அடையலாம். இவ்வாறு கழிவுப்பொருட்களைச் சேகரித்து புதிய பயன்களை பெறுவதன்மூலம் சிறார்களின் மூளை விருத்தியடைதல், கண்டுபிடிப்பிடிப்புக்கள், தன்னம்பிக்கை, பொருட்களின் முக்கியத்துவம் என்பவற்றுடன் தன்னார்வத்தையும் அதிகரிக்கச் செய்யும். (முற்றும்)

யானை சேற்றில் அமிழும்போது தவளையும் எட்டி உதைக்கும்.
- *சாணக்கியர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேசம் உதவாவிட்டால் எமது இருப்பு கேள்விக்குறியாகும்

போருக்குப் பின்பான ஈழத் தமிழர்களின் எதிர்காலம் சர்வதேசத்தின் கைகளில் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் இனப்பிரச்சினைக்கு உயர்ந்தபட்ச தீர்வுத் திட்டங்களை முன்வைத்த இலங்கை ஆட்சியாளர்களும் சிங்களத் தரப்புக்களும் இப்போது இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என்கிறார்கள்.

இன்னும் சிலர் விடுதலைப் புலிகள் இல்லாதபோது இனப்பிரச்சினைக்குத் தீர்வு என எதையும் முன்வைக்கத் தேவையில்லை என வெளிப்படையாகவே கூறி வருகின்றனர்.

ஆக, ஈழத் தமிழ் மக்கள் ஆயுத பலத்துடன் இருந்தபோது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நினைப்பு இலங்கை ஆட்சியாளர்களிடம் இருந்தது.

ஆனால் 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் என்றால் - அவர்கள் சிறுபான்மை இனம் என்பது மட்டுமல்லாமல்; அவர்களை அனைத்து விடயங்களில் இருந்தும் ஓரங்கட்டுதல் என்ற விடயத்தை மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டு அரங்கேற்றுகின்ற நடவடிக்கையிலும் பேரினவாத சக்திகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிட்டு கடுமையான அழுத்தங்களை இலங்கை அரசு மீது பிரயோகித்தால் அன்றி இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதையோ உரிமை மற்றும் அதிகாரம் என்பதையோ தமிழ் மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மை.

ஆகையால் சர்வதேச சமூகத்தின் தலையீடு இன்றி இலங்கையின் ஆட்சியாளர்கள் எவரும் தமிழினத்துக்கு உரிமை தரமாட்டார்கள் என்ற உண்மையை உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூற வேண்டும்.

அதேநேரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் தமிழ் மக்களின் அவலத்தை எடுத்துக் கூறும் பொருட்டு பேரவையில் பங்கேற்கும் உறுப்புரிமை நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து இலங்கை ஆட்சியாளர்களின் போக்கையும் தமிழினம் பட்ட துன்பம் போக எதிர்காலத்தில் படப்போகின்ற துயரங்களையும் எடுத்துரைத்து அவர்களின் ஆதரவைப் பெறுவதும் கட்டாயமானதாகும்.

இதனை புலம்பெயர் தமிழ் மக்கள் ஓரளவு செய்து வருகின்றனராயினும் ஈழத் தமிழினத்தின் அரசியல் பிரதிநிதிகளும் புத்திஜீவிகளும் ஏனைய பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு சரியான பொறிமுறையின் கீழ் மேற்குறிப்பிட்ட விடயத்தை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த முயற்சியை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூடும்போது செய்தல் என்றில்லாமல், தொடர்ச்சியாகச் செய்வதே பலன் தரும் என்பதால் இதுவிடயத்தில் காத்திரமான நடவடிக்கை தேவை.

# 50 பேரின் உயிரை காவு கொண்டது ஒரு தனிநபரே

## நியூசிலாந்து பொலிஸார் உறுதி

50 பேரின் உயிரை காவு கொண்ட நியூசிலாந்து தாக்குதல் தனிநபரொருவரினாலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் மத்தியில நேற்று திங்கட்கிழமை கருத்து தெரிவித்த நியூசிலாந்து பொலிஸ் ஆணையாளர் மைக் புஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்து வரலாற்றின் மிகப்பாரிய மற்றும் முக்கிய விசாரணையாக கிறைஸ்ட்சேர்ச் துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணைகள் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடெங்கிலுமுள்ள 250 துப்பறிவாளர்கள் மற்றும் நிபுணர்கள் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (7)

## ஜெனிவா விவகாரம்: அரசின் நிலைப்பாடு தேசத் துரோக செயற்பாடு

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைபேரவையின்ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கைக்கு அரசாங்கம் இணக்கப்பாடு வழங்க தீர்மானித்துள்ளமை தேசத் துரோக செயற்பாடாகும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

மனித உரிமை பேரவையில் இராணுவத்தினருக்கு எதிரான செயற்பாடுகள் இன்று தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை அரசாங்கம் இரண்டு தரப்பினரூடாக அணுகுகின்றது. ஜனாதிபதி தலைமையில் ஒரு தரப்பினரும் அரசாங்கத்தின் தரப்பில் பிறிதொரு தரப்பினரும் போட்டித்தன்மையுடன் செயற்படுவதால் எவ்விதமான சாதகமான தீர்மானங்களும் இலங்கைக்கு ஏற்படாது.

அத்துடன் தற்போதைய செயற்பாடுகள் அனைத்தும் 2020ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பினை ஏற்கவுள்ள அரசாங்கத்திற்கும் பாரிய சவால்களை ஏற்படுத்தும் என்றார். (ம-3)

## அரசாங்கத்தின் தீர்மானம் நாட்டுக்கு பாதிப்பு - விமல்

அரசாங்கத்தின் தீர்மானத்தினால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பிரேரணையில் நாட்டின் பாதுகாப்பு குறித்தும், அரசியல் அமைப்பு குறித்தும், கலப்பு நீதிமன்றம் குறித்தும் பாரதுாரமான நிபந்தனைகள் உள்வாங்கப்பட்டுள்ளன" என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கட்டண விபரங்களின் பட்டியலை தமிழ், சிங்கள மொழிகளில் மாற்றுக!

### அமைச்சர் றிசாத் பதியுதீன் அதிரடி உத்தரவு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி மாவட்ட பதிவகத்தில் கட்டண விபரங்கள் தனி சிங்கள மொழியில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி மாவட்ட பதிவகத்தில் காணிகளை விரைவாக பதிவு செயயும் ஒருநாள் சேவையை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது.

காணி மாட்ட பதிவகத்தில் காணிகளை விரைவாக பதிவு செய்யும் ஒருநாள் சேவைக்குரிய கட்டண விபரங்கள் தனி சிங்கள மொழியில் காட்சிப்படுத் தப்பட்டிருந்தமை தமிழ் மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் அமைச்சர் றிசாட் பதியுதீனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து இரு மொழி பேசும் மக்களும் இணைந்து வாழும் பிரதேசமாக வவுனியா காணப்படுகின்றது.

எனவே இக் கட்டண விபரப் பட்டியலை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உடனடியாக மாற்றுமாறு திணைக்கள அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார். (2-250)

## புதையல் எடுப்பதற்கு துணைபோன குற்றச்சாட்டில் ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட இரண்டு பொலிஸாருக்கு இடமாற்றம்

(குருமன்காடு)

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுபாஸ் அரியரத்தன உட்பட இரு பொலிஸாருக்கு பொலிஸ் தலைமைக் காரியாலயத்தினால் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பூம்புகார் மயானத்துக்கு அருகாமையில் புதையல் தோண்டுவதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மது ஒழிப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11 மணியளவில் அலவாங்கு, மண்வெட்டி, கோடரியுடன் நினற தென்னிலங்கையைச சேர்ந்த 32, 35, 43, 48 மற்றும 54 வயதுடையவர்களை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்த பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களின் கையடக்கத் தொலைபேசியைச் சோதனையிட்ட சமயதில்ஈச்சங்குளம்பொலிஸ நிலைய பொறுப்பதிகாரியுடன் இவர்களுக்கு தொடர்பு இருந்தது உறுதி செய்யப்பட்டது. அத்துடன் இவர்கள் புதையல் தோண்ட முற்பட்ட சமயத்தில்ஈச்சங்குளமபொலிஸ நிலையப் பொறுப்பதிகாரியும் சார்ஜன் ஒருவரும் சம்பவ இடத்திற்கு அருகே காவலில் நின்றமையும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதன் அடிப்படையில் விசாரணையின் நிமித்தம் பொலிஸ தலைமை காரியாலயத்தினால் ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கும் பொலிஸ் சார்ஜனுக்கு மன்னார் பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (2-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில உப்பு மாவெளி, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கரு நாட்டங்கேணி, கொக்கிளாய், குமுழமுனையின் சில பகுதிகள் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனதில் தூய்மையான எண்ணங்களை மட்டும் அனுமதியுங்கள். நல்ல செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். தீய விஷயங்கள் தலைகாட்டாதபடி இருப்பதற்கு இது ஒன்றே வழி.
- பகை, பொறாமை ஆகியவற்றை வெளியிட்டால், வட்டியும் முதலுமாக புறப்பட்ட இடத்திற்கே திரும்பி விடும்.
- நல்லவனாக இருங்கள். பிறருக்கு நன்மை தரும் செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். ஆன்மீக வாழ்வில் உயர்வதற்கான வழி இது மட்டுமே.
- பண்டைக்காலத்தில் வாழ்விற்குரிய விதியாக தியாகம் கருதப்பட்டது. இனி வரப்போகும் பலகோடி நூற்றாண்டு காலத்திற்கும் இந்த விதி பொருந்தும்.
- செய்த தவறுகளை வாழ்த்துங்கள். அவை, ஈஉங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.
- எது நல்லதென்று மனதிற்குப் படுகிறதோ அதை மட்டுமே செயற்படுத்துங்கள்.

# விறுவிறுப்பானது மைதானம்; சாவகச்சேரி கிங்ஸ் அணி சம்பியன்



நல்லூர் தெற்கு சனசமூக நிலைய 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திய மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாவகச்சேரி கிங்ஸ் அணி வெற்றி வாகை சூடியது. வடக்கின் 56 முன்னணி அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியில், குழு நிலை போட்டிகளில் முதன்மை பெற்று இணுவில் கலைஒளி, சாவகச்சேரி கிங்ஸ், கார்மேல் போய்ஸ் மற்றும் மானிப்பாய் பிரய்ட் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

சாவகச்சேரி கிங்ஸ் அணிக்கும் மானிப்பாய் பிரய்ட் அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி கிங்ஸ் அணியினர் 5 ஓவர் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பிரய்ட் அணியினர் 5 ஓவர் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 11 ஓட்டங்களினால் தோல்வியை தழுவிக்கொண்டனர்.

இணுவில் கலைஒளி அணிக்கும் கார்மேல் போய்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற மற்றைய அரையிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணியினர் 5 ஓவர் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணியினர் 4 ஓவர் நிறைவில் 6 இலக்குகள் நட்டத்திற்கு 39 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 16 ஓட்டங்களினால் தோல்வியை தழுவிக்கொண்டனர்.

சாவகச்சேரி கிங்ஸ் அணிக்கும் இணுவில் கலைஒளி அணிக்கும் இடையில் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி கிங்ஸ் அணியினர் 5 ஓவர் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இதில் ஜேன்மன் 22 ஓட்டங்களையும் கௌஷிக் 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதோடு ஜீவிதன் மற்றும் நிரோஷன் ஆகியோர் தலா 2 இலக்குகள் வீதம் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணியினர் 5 ஓவர் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஒரு ஓட்டத்தினால் தோல்வியை தழுவிக்கொண்டனர்.

இதில் கோகுலன் 18 ஓட்டங்களையும் மோகன்ராஜ் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதோடு பிரதீஸ் 2 இலக்குகளையும் சசி மற்றும் ரோமன் ஆகியோர் தலா ஒரு இலக்குகள் வீதம் எடுத்துள்ளனர். சமபலம் வாய்ந்த அணிகள் மோதிய இந்த விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் சாவகச்சேரி கிங்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்று நல்லூர் தெற்கின் மகுடத்தை தனதாக்கிக்கொண்டது. (க-ம)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வேலணை பிரதேச செயலக துடுப்பாட்டம் சென்.பிலிப்ஸ் அணி சம்பியன்



வேலணை பிரதேசசெயலகத்துக்கு உற்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெண்புறவிநகர் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற வெண்புறவிநகர் அணி துடுப்பாட்டத்தை மேற்கொண்டு 8 ஓவர்கள் நிறைவில் 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு 60 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்.பிலிப்ஸ் அணி 6 ஓவர்கள் நிறைவில் 65 ஓட்டங்களைப்ஸ்ரீ பெற்று வெற்றி பெற்று பிரதேச சம்பியனானதுடன் மாவட்ட போட்டிக்கு தெரிவாகியது. (க)









**அகில இலங்கை செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் கிளிநொச்சி கல்வி வலயம் சாதனை படைத்துள்ளது. கடந்த 9, 10, 11 ஆம் திகதிகளில் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கிளிநொச்சி வலயம் 4 தங்க விருதுகளையும் 5 வெண்கல விருதுகளையும் பெற்று சாதனை படைத்து வடக்கு மாகாணத்திலும் அகில இலங்கை ரீதியாகவும் அதிக தங்க விருதுகளைப் பெற்ற வலயம் என்ற பெருமை பெற்றுள்ளது. அத்துடன் இலங்கையில் உள்ள 99 கல்வி வலயங்களில் அதிகூடிய அணிகள் (9 அணிகள்) தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய வலயம் என்ற சாதனையையும் படைத்துள்ளது. (க)**

## தமிழ் மக்கள்...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா.வுக்கான முன்னாள் அரசியல் பிரிவின் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்பு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தச் சந்திப்பின்போது கடந்த ஆண்டு ஒக்டோபர் 26 சம்பவங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவரும் செயற்பட்ட விதம் குறித்து ஜெப்ரி பெல்ட்மன் பாராட்டுத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், "தமிழ் மக்கள் எப்போதும் அரசியலமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தவர்கள். குறுகிய அரசியல் இலாபங்களுக்காக செயற்படாமல் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றியவர்கள்.

அரசியலமைப்பு சபை உயர் பதவிகளுக்கு நபர்களை நியமிக்கின்ற போது மிகவும் அவதானத்துடன் செயற்பட்டமையானது, அரசியலமைப்புக்கு முரணான சம்பவங்களை இந்த நாட்டின் உயர் நீதிமன்றங்கள் அனுமதிக்காமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

காணாமற்போனோருக்கான அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு போன்றவை மக்கள் மத்தியில் செயற்படுவது அவசியம்.

அத்தகைய அலுவலகங்கள் உண்மையை நிலைநாட்டுவதற்கு தொடர்ச்சியாக மக்களோடு இணைந்து செயற்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைப்பது மாத்திரமல்லாது அரசும் ஏனைய மக்களும் தங்களை குறித்து கரிசனையாக உள்ளார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளும் முகமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

அரசும் சில அரசியல்வாதிகளும் இதனை தமிழ் - சிங்கள பிரச்சினையாக உருவாக்க முயற்சிக்கின்றனர். இது அத்தகைய பிரச்சினை அல்ல. மாறாக இது அடிப்படை மனித உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும்.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கு பிற்பாடு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த விடயம் தொடர்பில் அநேக கருமங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

ஆனால் அரசியல் விருப்பும் உத்வேகமும் இல்லாமையும் அரசியல் ரீதியாக இருக்கின்ற செல்வாக்கினை இழந்து விடுவோம் என்ற பயமும் அரசியல்வாதிகள் மத்தியில் காணப்படுகின்றன.

தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை தீர்ப்பது தலைவர்களின் கடமை. அரசியல் விருப்பம் இல்லாமையானது சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நாடு முன்னேற்றகரமான பாதையில் செல்வதற்கு தடையாக உள்ளது.

தமிழ் மக்கள் தாம் எப்போதும் ஏமாற்றப்படுவதாகவே உணர்கிறார்கள். சரியானதை செய்வது தொடர்பில் சிங்கள தலைவர்கள் பின்வாங்குகிறார்கள்.

பிரிக்க முடியாத, பிரிபடாத ஒருமித்த நாட்டிற்குள் நியாயமான ஒரு அரசியல் தீர்வினையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமது சொந்த வரலாற்றையும் பாரம்பரியங்களையும் கொண்ட தனித்துவமான மக்கள். நாங்கள் கேட்பது எமது அடிப்படை உரிமைகளையே.

இன்று இந்த நாட்டில் எமது விருப்பத்திற்கு மாறாக நாம் ஆளப்படுகிறோம்.

இலங்கை அரசு சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இலங்கை தொடர்பான பிரச்சினையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்றுள்ளது. (ம-3)

## இலங்கை தொட...

அதாவது இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையே நாளை சர்வதேச நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தவுள்ளனர்.

எனினும் இதன்போது இலங்கையின் சார்பில் விவாதத்தில் கலந்துகொள்ளும் அரசதரப்புப் பிரதிநிதிகள் இந்தக்கோரிக்கையை நிராகரிக்கும் சாத்தியம் இருப்பதாகவே தெரிகிறது. (ம-3)

## ஜெனிவாவில் கருத்துமோதல்...

யிலான குழுவினர் இடைநடுவில் வெளிநடப்பு செய்தனர்.

பசுமை தாயகம் அமைப்பு ஏற்பாடு செய்த இலங்கை குறித்த விசேட அமர்வு நேற்று ஜெனிவாவில் குழு அறையில் நண்பகல் 12.00 மணியிலிருந்து 1.00 மணிவரை நடைபெற்றது: இதில் இலங்கை தமிழ் மக்களின் பிரதிநிதிகளான சுமந்திரன், சிவாஜிலிங்கம் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளான பாதிரியார் இம்மானுவேல், சுரேன் சுரேந்திரன் மற்றும் தென்னிலங்கையின் இராணுவத்தை பாதுகாக்கும் அமைப்பின் சரத் வீரசேகர தலைமையிலான பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். அத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

சரத் வீரசேகர தலைமையிலான இராணுவத்தை பாதுகாக்கும் அமைப்பினருக்கும் புலம்பெயர் அமைப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும் நிகழ்வில் சர்ச்சை நிலையும் தோன்றியது.

நிகழ்வை நடத்தியவர்கள் சர்ச்சை நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதிலும் வாக்குவாதம் தொடர்ந்தது. இதனையடுத்து சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் இடைநடுவில் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர். (ம-3)

## மக்களின் இழப்புகளின்றி...

இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது இராணுவத்தளபதி மஹேஸ் சேனாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

போர் என்ற ஒன்று நடக்கும் போது அங்கு பொதுமக்களின் இழப்புக்கள் இருக்கும். பொது மக்களின் இழப்புக்கள் இன்றி போர் ஒன்று இடம்பெற்றது என்பதை ஏற்பது கடினம்.

இதற்காக இலங்கை இராணுவம் அதனை செய்தது என்று தாம் கூறவரவில்லை என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பாராளுமன்றில்...

நேற்று இடம்பெற்ற பாதீட்டு குழுநிலை விவாதத்தின் போது, வடமாகாணத்தில் நிலவு கின்ற காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு காணி அமைச்சே காரணமாக இருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சுமத்தினார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் கயந்த கருணாதிலக, வடக்கு கிழக்கில் நிலவும் காணிப்பிரச்சினைகள் பலகூறுகளுக்கு உட்பட்டவை என்றும், அவற்றை தீர்க்க படிப்படியாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்ன அடுத்து உரையாற்றிய பொது எதிரணி பாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்தன, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் தோல்வி அடைந்திருப்பதாக குற்றம் சுமத்தினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது காணிப் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்களில் அரசாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியது.

ஆனால் இந்த விடயத்தில் எந்த தீர்வையும் வழங்கவில்லை. இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தினேஷ்குணவர்தன வலியுறுத்தினார்.

அத்துடன் போராட்டங்களை நடத்துகின்றவர்களையும் தீவிரவாதிகளாக குறிப்பிட்டு அடக்குமுறைக்கு உட்படுத்தும்வகையிலான தீவிரவாத முறியடிப்பு சட்டமூலத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், இது தொழிலாளர் சட்டங்களுக்கு எதிரானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், வடக்கு கிழக்கில் நிலவுகின்ற காணிப்பிரச்சினை தொடர்பாக அந்த பிராந்தியத்தின் பிரதிநிதிகள் நீண்டகாலமாக முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்ற போதும், அவை இன்னும் தீர்க்கப்படாதுள்ளது என்பதையும் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

அவரது உரையைத் தொடர்ந்து எழுந்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, வடக்கு கிழக்கில் காணி விடுவிக்கப்படுகின்ற விடயத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் பாராட்டி இருப்பதாக குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன, பெருந்தோட்டத் தொழிலாளர்களது வேதன அதிகரிப்பு விடயத்தை, தொழிற்சங்கத்துக்கும் - தொழிலாளர்களுக்கு இடையிலான பிரச்சினை என்று அரசாங்கம் கைவிட்டுவிடக்கூடாது என்று வலியுறுத்தினார். அவர்களின் கோரிக்கை நியாயமானது.

பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் தற்போது 50 ரூபாய் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதனை அடுத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களது பிரச்சினைகள் பல நெடுங் காலமாக தீர்க்காமலேயே இருப்பதாக சுட்டிக்காட்டினார். (ம-3)

## சர்வதேச நீதி...

செவ்வியில் குறிப்பிட்டார்.

மீண்டும் போர் ஒன்று வராதிருப்பதற்கு அடிப்படை காரணிகளை தேடி ஆராய வேண்டும் எனவும் வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, அபிவிருத்தி பணிகள் தொடர்பில் கருத்து தெரிவித்த வடமாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்தில் கடந்த பல வருடங்களாக நிலவும் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான நான்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (ம-3)

## ஜெனிவா பிரே...

வித்தன.

அதாவது தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 40/1 என்ற பிரேரணையில் நான்கு செயற்பாட்டு பந்திகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் பொதுவாக இலங்கை அரசாங்கம் செய்யவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய தீர்க்கமான நடவடிக்கைகள் குறித்தும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த பிரேரணை தற்போது மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வியாழக்கிழமை பிரேரணை நிறைவேற்றப்பட விருக்கிறது. (ம-3)

## வடக்கில் வர்த்தக நிலையங்...

கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் பஸ் சேவைகள் மற்றும் பாடசாலைகள் வழமை போன்று இடம்பெறும்.

கிழக்கில் நடைபெறும் மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் பூரண ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிக்கையில், "தமிழ் மக்களிற்கு எதிரான அடக்குமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தகைய அடக்குமுறைகள் இலங்கைத் தீவில் திட்டமிட்டப்பட்ட ரீதியிலான தமிழ் மக்களிற்கு எதிரான இனச்சுத்திகரிப்பாகவே உள்ளது.

அத்தகைய இனச் சுத்திகரிப்பின் உச்சமே இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், காணாமலாக்கப்பட்டதுமாகும். ஈழத் தமிழர்களிற்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பு போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமைச் சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள்களுக்குரிய பரிகார நீதியினை சர்வதேசம் தமிழ் மக்களுக்கு பெற்றுத்தர நாம் விழிப்போடு மக்கள் எழுச்சிப் போராட்டங்களினை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையினால்2015இல்முன்மொழியப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறிமுறைக்கு ஊடான உள்ளக பொறிமுறைகளினையே இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிய நிலையிலும் ஏற்கெனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் மீண்டும் கால அவகாசமே வழங்கப்படவுள்ளது. இதனை வெறும் கண்துடைப்பு நாடகமாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

இந் நிலையில் ஈழத் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நீதியினை கோரி இன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் பூரண ஆதரவு வழங்குகின்றது.

இவ்வகையில் நீதி கோரி இடம்பெறவிருக்கும் மக்கள் எழுச்சிப் பேரணியில் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் பங்குபற்றி பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,9,10)

## 5 மாத கர்ப்பிணி உட்பட...

யாழிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிச் சென்ற வான் புத்தளம் நாகவில்லுப் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 5 மாதக் கர்ப்பிணிப் பெண் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இக் கோரவிபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த 27 வயதான 5 மாத கர்ப்பிணிப் பெண்ணான அகல்யா மற்றும் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த 67 வயதுடைய மதியாபரணம் மகேஸ்வரி, மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த 53 வயதுடைய சிவானந்தன் சரோஜினி மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 38 வயதுடைய ஆணொருவரும் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதிலே உயிரிழந்துள்ள 5 மாதக் கர்ப்பிணிப் பெண் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தனது கணவனை அழைக்கச் சென்றவேளையே இக் கோர விபத்து இடம்பெற்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இது தொடர்பில்முன்னர்கிடைத்த தகவல்களுடன் விரிவான செய்தி 09ஆம் பக்கத்தில்) (ம-3,10)

### சுபிரி வாசனா

திகதி 2019/03/18
சீட்டிழுப்பு இலக்கம் 1413
எழுத்து 03 | வெற்றி இலக்கம் 21 38 42 66 | 15 58

### மெகா பவர்

திகதி 18/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 358
வெற்றி எழுத்து M | சுப்பர் இலக்க 19 | வெற்றி இலக்கங்கள் 14 27 37 41

### மஹஜன சம்பத

திகதி 2019/03/18
சீட்டிழுப்பு இலக்கம் 3878
ஆங்கில எழுத்து E | வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 1 7 7 6 5

### கொவிசெத

திகதி 18.03.2019
சீட்டிழுப்பு இலக்கம் 2067
ஆங்கில எழுத்து Y | வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 33 42 58

தேசிய லொத்தர் சபை

**BOC Travels (Pvt) Ltd**
**SUBSIDIARY OF BANK OF CEYLON**
**விமான பயணச்சீட்டு கருமபீடம்**

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான

**BOC Travels (Pvt) Ltd**

யாழ். மண்ணில் 10 வருடங்களுக்கு மேலாக தமது சேவையை வழங்கி வருகின்றது

**அதியுயர்**

**நம்பிக்கை | பாதுகாப்பு | உத்தரவாதம்**

**தென்னிந்திய திருத்தல யாத்திரை ஒழுங்குகள்**

- 4 பேர் கொண்ட குழுக்கள் 132,000/= முதல் (ஒருவருக்கு)
- 10 பேர் கொண்ட குழுக்கள் 120,000/= முதல் (ஒருவருக்கு)

**எமது சேவைகள்**

01. இந்தியா, கனடா, லண்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சுவிஸ், கட்டார், சவுதி மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
02. மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கான விசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்க முடியும்.
03. வெளிநாட்டில் இருந்து வரும் உங்கள் உறவினர்களின் விமானச்சீட்டுக்களுக்கு திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ள முடியும்.
04. பயணக் காப்புறுதி (Travel, Health Insurance), விசா கடிதம் (Visa Letter), தங்குமிட (Hotel) பதிவுகள் போன்றவற்றை எம்மிடம் செய்து கொள்ள முடியும்.
05. சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.
06. விடுமுறைப் பொதிகள் (Holiday Package)

(C-5812)

**இலங்கை வங்கி மேற்தரக்கிளை**
**1ம் மாடி ஆஸ்பத்திரி வீதி, (வேம்படிச் சந்தி அருகாமை)**
**யாழ்ப்பாணம்.**

**021 222 4575, 021 222 4576,**
**070 384 9335, 070 395 1794**


## சர்வதேசத்திடம்...

மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் ஒவ்வொருநாளும் முன்வைத்து வருகின்றனர். ஆகவே வடக்கில் பொதுமக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இவ்வாண்டுக்கான வரவு-செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, தொழில் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, தொலைத் தொடர்புகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.(ம-3)


**வீடு வாடகைக்கு**

யாழ். நகர் கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகாமையில் உள்ள 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (முன்பு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் இயங்கியது) நிறுவனங்களுக்கு ஏற்றது. மாதாந்த வாடகை ரூ.60,000 பேசித் தீர்த்துக் கொள்ளலாம். **0212222478, 0779530496**

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

(C-6736)



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


## கால அவகாசம்...

கூட்டத்தொடரானது ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்றைய தினம் இலங்கை தொடர்பான உப குழுக் கூட்டத்தில் உரையாற்றியமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகும் ஆர்வம் தனக்கு இல்லையெனவும் கட்சியின் உள்ளேயும் கட்சிக்கு வெளியேயும் கூட்டமைப்பின் தலைமை மாற்றம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர். கூட்டமைப்பின் அடுத்த தலைமை தொடர்பாக கட்சிக்குள் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. எனக்கும் அதைப்பற்றி எந்தவிதமான ஆர்வமும் கிடையாது.

மேலும் தலைமை மாற்றம் குறித்து கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் சிலர் வரவேற்றும் சிலர் எதிர்த்தும் வருகின்றமை குறித்து நான் ஒன்றும் கூறமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினராக நான் இருப்பதைப் பற்றியும் பலர் எதிர்க்கருத்தையும் இன்னும் பலர் சாதகமான கருத்தையும் கூறுகிறார்கள்.

ஒரு அரசியலமைப்புத் திருத்தம் மூலமாக நீண்டகாலமாக இருக்கின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்திற்காகவே நான் அரசியலுக்கு வந்தேன். அந்த நோக்கம் நிறைவேறுவதற் காகவே என்னுடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவித்துள்ளார். (ம-3)


**வேலைவாய்ப்பு**

இலங்கையில் வியாபாரத்துறையில் முன்னணி நிறுவனமான DNMC தனது புதிய கிளைகளுக்கு அலுவலகம் சார்ந்த பல்வேறு வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

✦Office Staff ✦Admin ✦Training Assistant ✦Training Managers

கல்வித் தகைமை- O/L, A/L, வயதெல்லை- 18-35, பதவியின் தேவைக்கு ஏற்ப பயிற்சி, மாத வருமானம் 25,000/=, பயிற்சியின் பின் மாதம் 45,000/= மேல் வருமானம், உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 076 678 1042**

(8032)


# மரண அறிவித்தல்

## வைரமுத்து றஞ்சன் (பாலன்)

*மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கெருடாவில் தெற்கு நீலாந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து றஞ்சன் அவர்கள் கடந்த (14.03.2019) வியாழக்கிழமை காலமானார்.*


*அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - இராசேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், இராசகுரு - கௌசலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், மாலினி அவர்களின் அன்புக் கணவரும், றஜனி (பிரான்ஸ்), ராகினி (பிரான்ஸ்), ராஜவதனி (இத்தாலி), ரங்கன் (பிரான்ஸ்), இராஜரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரமணன், ராஜரூபன், அனுசன், றம்சியா, மதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி அவர்களின் அன்பு மாமனும், தாருசீசனின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2019) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**நீலாந்தனை,**
**கெருடாவில் தெற்கு,**
**தொண்டைமானாறு.**

(8023)

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 641 8211**



**தோற்றம் : 1961.01.27**
**மறைவு : 2019.03.14**

## தமிழ...

பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர்களால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு நீதிகிடைப்பதற்கு தாம் தொடர்ந்தும் போராடுவதாக, கன்செர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் றொபர்ட் ஹல்ஃபோன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் பலமாக ஒலிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகாலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், இலங்கையில் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்று, தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக்கட்சி குழுவின் தலைவர் போல் ஸ்கல்லி குற்றம் சுமத்தியுள்ளார். (ம-3)


**முன்மொழிவுகளுக்கான விளக்க கருத்தரங்கு**
**பாதீடு - 2019**

**(சமகால போக்கு தொடர்பான கலந்துரையாடல்)**

23.03.2019 (சனிக்கிழமை) முற்பகல் 9.00 - 12.00 மணி வரை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
147-2/3,K.K.S வீதி, யாழ்ப்பாணம். பதிவுகளுக்கு 0777 822 014 / 021 222 1455 பதிவுக்கட்டணம் ரூபாய் 500

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

(சி-5799)
Seminar On Budget 2019


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.